வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 19.07.2025 சனிக்கிழமை இதழ் : 200 பக்கங்கள் : 12




# வடக்கு மனித புதைகுழிகள் குறித்து விரைவில் உண்மைகள் வெளிவரும்!

## நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 19

**வடக்கில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பில் விரைவில் உண்மைகள் வெளிவரும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில்-

செம்மணி மனிதப் புதைகுழி உட்பட வடக்கில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பில் விரைவில் உண்மைகள் வெளிவரும். இதற்கு அரசு ஒருபோதும் தடையாக இருக்கமாட்டாது.

வடக்கு மனிதப் புதைகுழிகள் தொடர்பில் நீதி மன்றங்களில் இடம் பெறும் விசாரணை களுக்கு அரசு முழுமையான ஒத்துழைப்பு வழங்கும்.

உண்மைகள் வெளி வந்து குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது - என்றார். (அ)

## ராஜிதவின் முன் பிணை மனு நிராகரிப்பு

கொழும்பு, ஜூலை 19

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால், தான் கைது செய்யப்படுவதை தடுக்குமாறு கோரி, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தாக்கல் செய்த முன் பிணை மனுவை நிராகரித்து, கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி நேற்று உத்தரவிட்டார்.

கிரிந்த மீன்பிடி துறைமுகத்தில் மணல் அகழ்வு செய்யும் திட்டத்தை கொரிய நிறுவனத்திற்கு ஒப்படைத்து, அரசாங்கத்திற்கு

11

## இசைத்துறையில் ஆர்வமுள்ளோருக்கு பயற்சிகள் வழங்குவதற்கு முழு ஆதரவு!

### யாழ். வந்த பிரபல பாடகர் ஸ்ரீநிவாஸ்

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை 19

இசைத்துறைக்கு தென்னிந்தியாவில் உள்ளது போன்ற வாய்ப்புக்கள் வசதிகள் இங்கே குறைவு. ஆனாலும் இங்குள்ள பிள்ளைகள் இசைத்துறையில் மிளிர இசை தொடர்பான வகுப்புக்கள் , பயற்சிகளுக்கு என்னால் முடிந்த ஆதரவை நிச்சயமாக வழங்குவேன் என தென்னிந்திய பிரபல பாடகர் ஸ்ரீநிவாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்று



சனிக்கிழமை நடைபெறவுள்ள இசை நிகழ்வில் கலந்து கொள்வதற்காக யாழ்ப் பாணத்துக்கு வருகை தந்துள்ள ஸ்ரீநிவாஸ், நேற்று மருத்துவ பீடத்தில் தனது மகள் சரண்ஜாவுடன் ஊடக

11

## வவுனியா வன்முறை; மேலும் 5 பேர் கைது

வவுனியா, ஜூலை 19

வவுனியா - கூமாங்குளம் பகுதியில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் மேலும் 5 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு வவுனியா, கூமாங்குளம் பகுதியில் மோட்டர் சைக்கிளில் சென்ற நபர் ஒருவர் வீதியில் விழுந்து மரணமடைந்திருந்தார். இதன்போது அப் பகுதியில் பயணித்த போக்குவரத்து பொலிஸாரே குறித்த மரணத்துக்கு காரணம் என தெரிவித்த ஒரு குழுவினர் குழப்பத்தில் ஈடுபட்டதுடன், பொலிஸார் மீதும் தாக்குதல் மேற்கொண்டனர்.

மரணம் தொடர்பில் விசாரணை செய்ய சென்ற பொலிஸார் மீது அப் பகுதியில் குழுமி இருந்தவர்கள் தாக்குதல்

11



## நல்லூருக்கு சென்ற சபாநாயகர்

யாழ்ப்பாணம், ஜூலை. 19

வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலில் சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்ன நேற்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு விஜயம் செய்த சபா நாயகர் பல்வேறு இடங்களுக்கும் சென்றார்.

இதனொரு அங்கமாக நேற்று மாலை நல்லூர் கந்த சுவாமி கோவிலில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார்.

## தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர் திருமணங்களை பதிவு செய்ய உத்தரவு

சென்னை, ஜூலை 19

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிப்பவர் களின் திருமணங்களைப் பதிவு செய்ய சார் பதிவாளர்களுக்கு இந்திய பதிவுத்துறை உத்தரவிட்டுள்ளது.

ஆவணங்களைப் பரிசீலனை செய்து சிறப்புத் திருமண சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கு உத்தர விடப்பட் டுள்ளதாகத் தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

898 தம்பதியினரின் திருமணங்களை பதிவு செய்ய எதிர்வரும் 26ஆம் திகதி அன்று சம்பந்தப் பட்ட பதிவாளர் அலுவலகங்களை செயல்பாட்டில் வைக்க உத்தரவிடப் பட்டுள்ளது. (அ)

## ஆட்சியை கவிழ்க்க முன் உங்கள் அப்பா எங்கே என சொல்லுங்கள்!

### ராஜிதவின் மகனிடம் அமைச்சர் கேள்வி

கொழும்பு, ஜூலை 19

“ஆட்சியைக் கவிழ்ப்பது ஒரு புறம் இருக்கட்டும். முதலில் உங்கள் தந்தை எங்கிருக்கின்றார் என சொல்லுங்கள். அவ்வளவு சக்திவாய்ந்த நபரென்றால் எதற்காக ஒளிந்து விளையாட வேண்டும்.”

- இவ்வாறு ராஜித சேனாரத்னவின் மகன் சதுர சேனாரத்னவுக்கு, அமைச்சர் சமந்த வித்யாரத்ன பதிலடி கொடுத்துள்ளார்.

11

## இணைய மோசடி: 21 இந்திய பிரஜைகள் இலங்கையில் கைது!

கொழும்பு, ஜூலை 19

இணையவழி மோசடியில் ஈடுபட்ட 21 இந்தியப் பிரஜைகள் நேற்று குடிவரவு மற்றும் குடியகல்வு துறையின் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

சுற்றுலா விஸாவின் மூலம் நாட்டுக்கு வந்து இந்த குழுவினர், விஸா காலாவதியான பின்னரும் சட்ட விரோதமாக நாட்டில் தங்கியிருந்ததாக தெரிவிக் கப்படுகின்றது.

கிருலப்பனை பகுதியில் உள்ள வீடொன்றில்

11

## ஊழலில் ஈடுபடாதவர்களை அரசு நிச்சயம் பாதுகாக்கும்!

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, ஜூலை 19

சுகாதாரத்துறையில் இலஞ்ச ஊழலில் ஈடுபடாதவர்களை அரசாங்கம் நிச்சயம் பாதுகாக்கும் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபுவின் அழைப்பின் பேரில் மட்டக்களப்பு

11

## மருந்தாளர்கள் பற்றாக்குறைக்கு தீர்வு காண திட்டமொன்று தேவை

### எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 19

மருந்தாளர்களுக்கு நிலவும் பற்றாக்குறைக்கு தீர்வு காண காலக்கெடுவுடன் கூடியதொரு திட்டமொன்று தேவையாகும். அதனால் இந்தப் பிரச்னையை அடிப் படையாகக் கொண்டு வீதியில் இறங்க வேண்டாம். அது மக்களுக்கே பாதிப்பை ஏற்படுத்தும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.


அகில இலங்கை தனியார் மருந்தக

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மானிப்பாய் இந்து கல்லூரியில் விபுலானந்தர் நினைவு பேருரை

யாழ்ப்பாணம், ஜூலை 19

மானிப்பாய் இந்து கல்லூரியில் தமிழில் அமைப்பு முன்னெடுத்த சுவாமி விபுலானந்தர் நினைவு பேருரை நிகழ்வு நேற்றுக் காலை கல்லூரி அதிபர் துரைரட்ணம் திலீப்குமார் தலைமையில் நடைபெற்றது

இந்நிகழ்வில் தமிழி அமைப்பாளர் யோ. நிவேதன் தொடக்கவுரை ஆற்றினார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் - உள்ளக் கமலம் உவந்தளித்த உத்தமர் என்ற பொருளில் நினைவுப் பேருரை ஆற்றினார்.

பேருரையாளர் தமிழி அமைப்பினராலும் பாடசாலை சமூகத்தினராலும் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார். (அ)

வடக்கிலுள்ள தொழில் கல்வி நிலையங்களில் வெளிமாகாணத்தைச் சேர்ந்தவர்களே அதிகம்

## எமது மாகாணத்தவர்கள் அதனை பயன்படுத்துவது குறைவு என்கிறார் மாகாண ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், ஜூலை 19

வடக்கிலுள்ள தொழில் கல்வி நிலையங்களில் வெளி மாகாணத்தைச் சேர்ந்தவர்களே அதிகம் கல்வி கற்கின்றனர். எமது மாகாணத்தவர்கள் அதனைப் பயன்படுத்துவது மிகக் குறைவாக உள்ளது. இது மாற்றியமைக்கப்படவேண்டும். தொழில் கல்வியின் அவசியத்தை அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் இ.திருமுருகன் தலைமையில் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் வைபத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர் தனது உரையில்,

இன்றைய காலத்தில் தொழிற் பயிற்சி மிக முக்கியமானது. அதன் அவசியம் இப்போது எல்லோராலும் உணரப்படுகின்றது. அரச வேலை வாய்ப்பு என்பது மட்டுப்படுத்தப்பட்ட அளவாக மாறிக் கொண்டு வருகின்ற சூழலில், தனியார் வேலை வாய்ப்பையோ அல்லது வெளிநாட்டு வேலை வாய்ப்பையோ பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால் தொழிற் கல்வி அவசியமானது. அதுவும் இவ்வாறான சான்றிதழ் கற்கை நெறிகள் உங்களுக்கு கைகொடுக்கும்.

வடக்கு மாகாணத்தில் போரால் அழிவடைந்த தொழிற்சாலைகளை மீள உருவாக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த தொழிற்சாலைகள் இங்கு மீள இயங்கும்போது தொழிற் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புக்களில் முன்னுரிமை கிடைக்கக் கூடிய சாத்தியம் இருக்கின்றது.

எதிர்காலத்தில் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளாமல் தொழில்களில் ஈடுபட முடியாத நிலைமை உருவாகி வருகின்றது. எனவே, இன்று இங்கு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும் நீங்களும், உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கு இந்தத் தொழிற் கல்வியின் அவசியத்தை எடுத்துக்கூற வேண்டும்.

பாடசாலை இடைவிலகலில் பெண்களை விட ஆண்களே அதிகமாக உள்ள நிலையில், இவ்வாறான தொழிற் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்பவர்கள் ஆண்களை விட பெண்களே அதிகமாக உள்ளனர். எனவே, கல்வியிலிருந்து இடைவிலகும் ஆண்களை இவ்வாறான தொழிற்முயற்சிகளை நோக்கி ஈர்க்க வேண்டும் - என்றார். (அ)

## செம்பியன்பற்று - மாமுனை இணைப்பு வீதி பால புனரமைப்பு நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று மாமுனை இணைப்பு வீதியில், பல காலமாக உடைந்த நிலையில் காணப்பட்ட பாலத்தை புனரமைக்கும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில், பாலம் புனரமைப்புச் செய்யப்படுகின்றது.

கடந்த 2 ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் யுகதீஸ், செம்பியன்பற்று மாமுனை மக்களின் கோரிக்கைகளுக்கு அமைய, வீதியையும் பாலத்தையும் பார்வையிட்டார்.

அதன்போது, இரண்டு கிழமைகளில் பாலம் புனரமைக்கப்படும் என தெரிவித்த நிலையில், பால புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

## போதைப்பொருளுடன் 3 இளைஞர்கள் கைது!


யாழ்ப்பாணம், ஜூலை. 19

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குருநகர் பகுதியில் போதைப்பொருளுடன் மூன்று இளைஞர்கள் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய மூன்று இளைஞர்களை பொலிஸார் சோதனையிட்ட போது, அவர்களிடம் இருந்து 90 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

அதனை அடுத்து மூவரையும் கைது செய்த பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## மரபிழந்த பாரம்பரிய பண்பாட்டை வெளிப்படுத்தி வவுனியாவில் நேற்று பண்பாட்டு ஊர்திப் பவனி





யாழ்ப்பாணம், ஜூலை 19

மரபிழந்த பாரம்பரிய பண்பாட்டை வெளிப்படுத்தி வவுனியா பிரதேச செயலக பண்பாட்டு விழாவை முன்னிட்டு நேற்று ஊர்திப் பவனி சிறப்பாக இடம்பெற்றது. வவுனியா பிரதேச செயலகம் மற்றும் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையில் வவுனியா பிரதேச கலாசார பேரவையும், பிரதேச கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்திய பண்பாட்டு ஊர்திப் பவனி பிரதேச செயலாளர் இ. பிரதாபன் தலைமையில் பிரதேச செயலக முன்றில் ஆரம்பமாகியது.

வவுனியா பிரதேச செயலக முன்றில் இருந்து ஆரம்பமாகிய ஊர்திப் பவனி தமிழர் பாரம்பரியம், கலாசாரம், வரலாறு, தொல்லியல், கலைகள் என்பவற்றை பறைசாற்றி கிராம மக்களின் பங்களிப்புடன் வவுனியா, கண்டி வீதியை அடைந்து பசார் வீதி, மணிக்கூட்டு கோபுர சந்தி, புகையிரத நிலைய வீதி, குருமன்காடு, மன்னார் வீதி ஊடாக சென்று பிரதேச செயலகம் முன்பாக நிறைவடைந்தது.

இதில் தமிழர் வாழ்வியலின் பாரம்பரியத்துடன் தொடர்புடைய விவசாய முறைகள், நீர்பாசன முறைகள், உணவு தயாரித்தல், கைவினை உற்பத்திகள், வழிபாட்டு முறைகள், சடங்கு முறைகள், கிராமிய கலை மரபுகள், கிராமிய உணவு பழக்கவழக்கம் உள்ளிட் பல்வேறு அம்சங்களை தாங்கிய 47 க்கும் மேற்பட்ட ஊர்திகள் பவனி வந்திருந்தன.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், வவுனியா அரச அதிபர் பீ.ஏ.சரத் சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் நா.கமலதாசன், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் த.முகுந்தன், வவுனியா தெற்கு வலய பிரதி கல்விப் பணப்பாளர் அமல்ராஜ், அரச அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள், மதகுருமார், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமயம் சார் அமைப்புக்கள், கிராமிய மக்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டதுடன், வீதிகளில் மக்களும் குழுமியிருந்து அதனை பார்த்து உற்சாகப் படுத்தினர். (அ)

## யாழ் வந்தார் சிறீநிவாஸ்



யாழ் ,ஜூலை 19

தென்னிந்திய பிரபல பாடகர் ஸ்ரீநிவாஸ் பங்கு பெறும் இசை நிகழ்ச்சி யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் இன்று சனிக்கிழமை மாலை ஆறு மணிக்கு இடம்பெறவுள்ள நிலையில் ஸ்ரீநிவாஸ் தலைமையில் தென் னிந்திய பாடகர்கள், இசை கலை ஞர்கள் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் ஊடாக நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

இதன்போது, யாழ்ப்பாணத்தில் அவர்களுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் போக்குவரத்து வசதிகளுக்காக பேருந்து ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கான நிதியை திரட்டும் முகமாக குறித்த இசை நிகழ்ச்சி யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு ஒரு களியாட்ட நிகழ்வாக அல்லாமல் மருத்துவ பீட மாணவர்களையும் மருத்துவ சமூகத்தையும் மேம்படுத்தும் ஒரு நிகழ்வாக காணப்படும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது (அ-5)

## தர்மபுரம் பாடசாலையில் ஆக்கத்திறன் கண்காட்சி

கிளிநொச்சி, ஜூலை 19

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட தர்மபுரம் இலக்கம் ஒன்று அரசினர் தமிழ்க் கவலன் பாடசாலையில் நேற்று ஆக்கத்திறன் கண்காட்சி இடம்பெற்றது.

மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கத்திறன் கண்காட்சி, அதிபர் ம.பரமநாதன் தவனேசன் தலைமையில், பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதம விருந்தினராக, கிளிநொச்சி வடக்கு கல்வி வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் பங்கேற்றார்.

இதில், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் பங்கேற்றனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 19.07.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இலங்கையின் இரட்டை அரசியல்

ஐக்கிய நாடுகள் சபையின் பலஸ்தீன விவகாரங்களுக்கான விசேட அறிக்கையாளர் பிரான்செஸ்கா அல்பெனிஸ் மீது அமெரிக்கா தடை விதித்திருக்கின்றது. அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நடவடிக்கைகளை ஊக்குவித்தமை மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் பணியாற்றியமை தொடர்பிலேயே அவர் மீது அமெரிக்கா தடை விதித்திருக்கின்றது. சர்வ தேச குற்றவியல் நீதிமன்ற நீதிபதிகள் நால்வர் மீது, அண்மையில் அமெரிக்கா தடைவித்தித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தற்போது குறித்த விடயத்துடன் தொடஉபுபடும் ஐ.நா விசேட அறிக்கையாளரையும் தடைப் பட்டியலில் இணைத்திருக்கின்றது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க், இதனை கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார். இந்த அறிக்கையில் கையெழுத்திட்டிருக்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்று. இலங்கை ஆட்சியாளர்களின் நடவடிக்கை விசித்திரமானது. அதாவது, சொந்த நாட்டில், சொந்த மக்களின் மனித உரிமை மீறல் தொடர்பான விசாரணைகளை செய்வதற்கு முயற்சிக்கவில்லை - யுத்தம் முடிவுற்று பதினாறு ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னரும் கூட, பாதிக்கப்பட்ட மக்கள் நீதி தரமாட்டீர்களா என்னும் ஏக்கத்துடன் இருக்கின்றனர். ஆனால், மறுபுறமோ பலஸ்தீன மக்களின் மனித உரிமை மீறப்படுவதாகவும், அவர்களுக்கு ஆதரவாக தாங்கள் இருப்பதாகவும் நல்ல பிள்ளையாகவும் இலங்கை காண்பித்துக் கொள்கின்றது.

அதேவேளை, தாங்கள் நடுநிலையான வெளிவிவகாரக் கொள்கையை கொண்டிருப்பதாகவும் கூறிக் கொள்கின்றது - நடுநிலை என்றால் இஸ்ரேலுக்கு எதிரான அறிக்கைகளை ஆதரிக்க முடியாதே - அதே போன்று, உலக விடயங்களில் தலையிடக் கூடாதல்லவா! உண்மையில் இலங்கையின் அணுகுமுறைகள் அனைத்துமே இரட்டைத் தன்மையானது. இதனைத்தான் இலங்கை பல தசாப்தங்களாக மேற்கொண்டு வருகின்றது.

இந்த விடயத்தை தமிழ் அரசியல் தரப்புக்கள் மற்றும் சிவில் சமூகம் என்போர் அறிக்கையிடுவதில்லை. சர்வதேச அரங்குகளில் முன்வைப்பதில்லை. இலங்கைக்குள் விடயங்களை முன்னெடுப்பதில் தொடர்ந்தும் தயக்கங்களை காண்பித்து வரும் இலங்கையின் ஆட்சியாளர்கள் எவ்வாறு பலஸ்தீனர்களின் நீதி பற்றிப் பேச முடியும்?

சொந்த மக்களின் நலன்களுக்காக நியாயமாக நடந்து கொள்பவர்கள் முழு உலகினதும் நியாயம் தொடர்பில் கவலைப்பட்டால் அதில் நியாயமுண்டு. ஆனால், இங்கு நடப்பதோ வேறு. ஆனால், இவ்வாறான விடயங்களை கேள்விக்குட்படுத்த வேண்டிய தமிழ் அரசியல்வாதிகள் என்போர் அரசாங்கத்தோடு இணைந்து பலஸ்தீனம் பற்றிப் பேசுவதில் முட்டுப்பட்டுக் கொள்கின்றனர்.

இஸ்ரேல் காசாவில் அரச பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுவதாகக் கூறுபவர்களோடு தங்களுடைய குரலையும் இணைத்துக் கொள்கின்றனர். ஆனால் அரசாங்கத்தின் இரட்டை அணுகுமுறை தொடர்பில் பேச வேண்டியதுதான் தமிழ் அரசியல்வாதிகளின் கடப்பாடு. பலஸ்தீன ஜனாதிபதி, மகிந்த ராஜபக்ஷவை அழைத்து 'பலஸ்தீன நட்சத்திரம்' என்று விருது வழங்கியமை பற்றி சுமந்திரனோ கஜேந்திரகுமாரோ தங்களின் ஆங்கிலப் புலமையை காண்பித்தமைக்கு சான்றில்லை.

நம்மைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதை புரிந்து கொள்வதுதான் அரசியலை புரிந்து கொள்வதற்கான முதல் படி.

# மரபுகளை பேணாதுவிடில் இனத்தின் வரலாற்றைக் கையளிக்க முடியாது!

## சிறீதரன் எம்.பி.தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜூலை 19

புதுமைகளுக்குள் புகுந்துகொள்கிறோம் என்ற போர்வையில் ஈழத்தமிழர்களின் மரபியல் அடையாளங்களையும், பண்பாடுகளையும், கலை - விளையாட்டு மாண்பையும் பேணத்தவறிவிட்டு, இதுவே எங்கள் இனத்தின் அடையாளம் என்று அடுத்த தலைமுறையிடம் நாம் எதைக் கையளிக்க முடியும். அதனால்தான் எங்கள் இனத்தின் தனித்துவம் பொருந்திய கலைகளையும், விளையாட்டுகளையும், மரபார்ந்த அடையாளங்களையும் பின்பற்றுவதிலும், வளர்த்தெடுப்பதிலும் அவற்றின் மகத்துவமும், மாண்பும் குன்றாத வகையில் எங்கள் அடுத்த தலைமுறையிடம் அவற்றைக் கையளிக்க வேண்டும் என்பதிலும் நாம் தீர்க்கத்தோடு இருக்கிறோம் என பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் மரபார்ந்த பண்டிகைகளுள் ஒன்றான ஆடிப்பிறப்பு நாளான நேற்று முன்தினம், பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இயங்கும் இயக்கச்சி கரிகாலன் விளையாட்டுக் கழகத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்ட கபடிப் போட்டியுடன் கூடிய ஆடிக்கூழ் பகிர்ந்துண்ணும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், உபதவிசாளர் சிவகுரு செல்வராசா, சபையின் கௌரவ உறுப்பினர்கள், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அச்சுவேலி திரேசாள் மகளிர் கல்லூரி முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 19

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி முத்தமிழ் மன்றம் முன்னெடுத்த முத்தமிழ் விழா கடந்த புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் அருட்சகோதரி மேரி ஜெயமலர் தலைமையில் நடைபெற்றது

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண கல்வி வலய தமிழ் பாடப் பிரதி கல்விப் பணிப்பாளர் இ.இராஜமோகனும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசனும், கௌரவ விருந்தினராக முன்னாள் அதிபர் அருட்சகோதரி மேரி எத்தல் வீவா, தமிழ் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் இ. குணேஸ்வரி, கார்மேல் கன்னியர் சபை மூத்த அருட் சகோதரி திரேசாராணி உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

புனித திரேசாள் மகளிர் கல்லூரி 1946 இல் சேர் சிற்றம்பலம் கார்டினரால் உருவாக்கப்பட்டு கார்மேல் சபையினரால் நிர்வகிக்கப்பட்ட பெண்கள் பாடசாலை ஆகும். (அ)



# கடல் போக்குவரத்தில் ஈடுபடவேண்டாம்

கொழும்பு, ஜூலை 19


அடுத்த 24 மணித்தியாலங்களுக்கு கடற்றொழில் நடவடிக்கைகளிலும், கடல் வழிப் போக்குவரத்திலும் ஈடுபட வேண்டாம் எனவும் கடற்றொழிலாளர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

காற்றின் வேகம் மணிக்கு 60 - 70 கிலோமீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

புத்தளம் முதல் கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலான கரையோரங்களில் கடற்றொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களை கவனமாக செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை - 19 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 03
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : நவமி




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். யாரையும் பகைத்துக் கொள்ளா தீர்கள். அலுவலக ரகசியங்களை வெளியிட வேண் டாம். இடம், பொருள், ஏவல்அறிந்து செயல்பட வேண்டும்

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண் டாம். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் எண்ணாங் களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். புது வேலை கிடைக்கும். விருந் தினர் வருகை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**கடகம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். உத்தி யோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதையோ இழந்த தைப் போல் இருப்பீர்கள்.வியாபாரத்தில் வேலை யாட்களிடம் வளைந்து கொடுத்துப் போவது நல் லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**துலாம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். தாய் வழியில் ஆதரவுப் பெருகும். சக ஊழியர்கள் உதவு வார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**விருட்சிகம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப் பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உத்தியோ கத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள். அமோகமான நாள்.

**தனுசு**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சி களை மேற்கொள்வீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழி யர்களால் இருந்த பிரச்னைகள் விலகும்.

**மகரம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர் கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக் கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள். நட்பு வட்டம் விரியும். தைரியம் கூடும் நாள்.

**மீனம்**
கை மாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். சிலர் உதவுவதை போல் உபத்திரவம் தருவார்கள். புது நட்பு மலரும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும்.

# பாடசாலை இடை விலகலில் வடக்கில் ஆண்களே அதிகம்

## ஆளுநர் வேதநாயகன் கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 19

வடக்கு மாகாண பாடசாலைகளில் இடை விலகலில் ஆண்களே அதிகமாகவுள்ளனர் என்று ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான தேசிய தொழில் தகைமை சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"தொழில் பயிற்சி மிகவும் முக்கியமானது.

தனியார்த் துறையில் பல வேலைவாய்ப்புகள் அதிகமாகவுள்ளன. எதிர்காலத்தில் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும் போது நல்ல தொழில் வாய்ப்பு உள்ளது. அப்போது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தொழில் வாய்ப்பு ஏற்படும்.

மேலும், பாடசாலைகளில் இடை விலகலில் ஆண்களே அதிகமாகவுள்ளனர். இந்த நிகழ்வில் பெண்களின் எண்ணிக்கையே அதிகமாகவுள்ளன. இப் பயிற்சி நெறியின் முக்கியத்துவத்தை ஏனையவர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். மேலும், கிளிநொச்சியில் இயங்கும் தொழில்நுட்பக் கல்லூரிக்கு தென்பகுதியிலிருந்து கற்க மாணவர்கள் வருகின்றார்கள். அவர்களுக்கு அப் பயிற்சி நெறியின் முக்கியத்துவம் விளங்குகிறது. தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்கள் தமது சொந்த முயற்சியிலும் முன்னேற வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (எ)







# தேசிய தொழில் தகைமை சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 19

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான தேசிய தொழில் தகைமை சான்றிதழ் வழங்கும் நிகழ்வு தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஆர். திருமுருகன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனும் கலந்து கொண்டனர். (எ)

# "மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட வேண்டும்"

யாழ்ப்பாணம், ஜூலை 19

"மாணவர்களுக்கு அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு முக்கியமானது. தற்போது அறிவு மற்றும் திறனைப் பெற்றுக்கொண்டுள்ளபோதும் மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட வேண்டும்" - இவ்வாறு யாழ். மாவட்ட அர சாங்க அதிபர் ம. பிரதீபன் தெரி வித்தார்.

எமது பகுதியில் வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்துவது குறைவாகவுள்ளது. வாடிக்கையாளர்களின் திருப்தி முக்கியத்துவம் வாய்ந்தது. இதனால் தொழில்துறைகளில் முன்னேற்றங்களை அடையலாம். மேலும், இப் பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்கள் பெற்றோர்களில் தங்கியிருக்காமல் சுயமாக முன்னேற வேண்டும். நிறுவனங்களில் பணியாற்றும் போது வாடிக்கையாளர்களின் திருப்தியை பூர்த்தி செய்வதால் தாங்கள் சார்ந்த நிறுவனம் வினைத்திறனாக விளங்கும். மாணவர்களின் எதிர்காலம் ஒளிமயமாக சிறக்க தமது வாழ்த்துகளையும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

தொழில் தகைமை சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த 191 மாணவர்களுக்கு ஆளுநர், அரசாங்க அதிபர் மற்றும் விருந்தினர்களால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (எ)

# தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பில் சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## வலி. வடக்கு பிரதேச சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். தையிட்டியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரை தொடர்பில் பிரதேச சபையால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் வ. பிரபாகரன் தீர்மானம் ஒன்றை முன்வைத்தார்.

குறித்த தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுக நகர திட்டத்தை இரத்து செய்யுமாறு அழுத்தம் தரப்பட்டது

## முன்னாள் ஜனாதிபதியின் செயலர்

கொழும்பு, ஜூலை 19

கொழும்பு துறைமுக நகர கருத்திட்டத்தை நானே இரத்துச் செய்தேன். பின்னர் நானே அத்திட்டத்தை மீள அமுல்படுத்துவதற்கு அனுமதியளித்தேன். துறைமுக நகர திட்டத்தை இரத்து செய்ய எனக்கு அப்போதைய அரசாங்கத்தால் கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது என்று முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழா ஒன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் எதிர்க்கட்சியாக செயல்பட்ட தரப்பினர் கொழும்பு துறைமுக நகர ஒப்பந்தத்தை இரத்து செய்வதாக மக்களுக்கு வாக்குறுதியளித்தார்கள். அந்த தரப்பினர் ஆட்சிக்கு வந்தவுடன் கொழும்பு துறைமுக நகர ஒப்பந்தத்தை இரத்து செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குறிப்பிட்டார்கள்.

அந்த சந்தர்ப்பத்தில் நான் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளராக இருந்தேன். துறைமுக நகர ஒப்பந்தம் குறித்து அப்போதைய பிரதமரிடம் பேச்சில் ஈடுபட்டேன். இந்த ஒப்பந்தத்தை முழுமையாக இரத்துச் செய்யாமல் சிக்கல்களுக்கு தீர்வு காணும் வகையில் திருத்தங்களை மேற்கொள்ளலாம் என்று குறிப்பிட்டேன். இருப்பினும், துறைமுக நகர ஒப்பந்தம் விடயத்தில் எனக்கு கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய அப்போதைய அரசாங்கம் கொழும்பு துறைமுக நகர ஒப்பந்தத்தை இரத்துச் செய்தது. இதனால் குறித்த நிறுவனத்துக்கு 80 மில்லியன் டொலர் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து பல மாதங்களுக்கு பின்னர் கொழும்பு துறைமுக நகர ஒப்பந்தத்தை மீண்டும் அமுல்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எனக்கு கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது. இதன் பின்னர் கொழும்பு துறைமுக நகர ஒப்பந்தம் மீண்டும் அமுல்படுத்தப்பட்டது - என்றும் கூறினார். (ஐ)

# கஹவத்தை இளைஞர் கொலை சந்தேகநபர்களுக்கு மறியல்

## மேலும் சந்தேகநபர்கள் நால்வர் கைது

கொழும்பு, ஜூலை 19

இரத்தினபுரி - கஹவத்தையில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டு மற்றொருவர் காயமடைந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இருவரையும் எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியிலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் பெல்மடுல்லை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டமையை அடுத்து நீதிவான் இந்த உத்தவை பிறப்பித்தார்.

மேலும், குறித்த கொலை சம்பவத்துக்கு உதவிய சந்தேகநபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், இளைஞர்களை கடத்திய ஜீப் வாகனமும் கைப்பற்றப்பட்ட தாக மேல் மாகாண வடக்கு குற்றத் தடுப்பு பிரிவு அறிவித்திருந்தது.

கடந்த 30ஆம் திகதி இரவு, கஹவத்தை - புங்கிரியா - பலன் சூரியகம பகுதியில் உள்ள வீட்டில் இரண்டு சகோதரர்களுடன் மற்றோர் இளைஞரும் பேசிக்கொண்டிருந்தனர். அந்தச் சமயம் அங்கு வந்த குழு ஒன்று தம்மை பொலிஸ் என்று கூறியது. அவர்கள் இளைஞர்களை கைது செய்ய முயன்றபோது ஒருவர் அங்கிருந்து தப்பியோடினார். ஏனைய இருவரையும் கைவிலங்கிட்டு கடத்திய குழு, அவர்களில் ஒருவரை சுட்டுக் கொன்றது. மற்றோர் இளைஞர் படுகாய மடைந்திருந்தார்.

போதைப்பொருள் வர்த்தகம் குறித்த தகவல்களை குறித்த இளைஞர் வழங்குவதாக எழுந்த சந்தேகத்தை அடுத்து இந்த குற்றம் நடந்ததுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர். (ஐ)

# பூஸா சிறை பாதுகாப்பு பணியிலிருந்து எஸ்.ரி.எவ்வை வெளியேற்றுமாறு வழக்கு

கொழும்பு, ஜூலை 19

பூஸா அதியுயர் பாதுகாப்பு சிறைச்சாலையின் நடவடிக்கைகளில் இருந்து பொலிஸ் விசேட அதிரடிப் படையினரை வெளியேற்றுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதா? அல்லது இரத்துச்செய்வதா? என்பது தொடர்பிலான தீர்மானம் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

பாதாள உலகக் குழுவை சேர்ந்த மிதிகம ருவன்"" என அழைக்கப்படும் ஜே. ஏ. ருவன் குமார என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் ரோஹந்த அபேசூரிய, மற்றும் நீதியரச் பிரியந்த பெர்னாண்டோ முன்னிலையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்காளி, எதிர்த் தரப்பு சார்பில் முன்வைக்கப்பட்ட விவாதங்களை கேட்ட நீதியரசர்களின் ஆயம், வழக்கு தொடர்பான எழுத்துபூர்வ சமர்ப்பணங்களை எதிர்வரும் ஒகஸ்ட் 25ஆம் திகதிக்குள் தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டதுடன் மனுவை விசாரணைக்கு எடுப்பதா இல்லையா என்பது தொடர்பில் செப்ரெம்பர் முதலாம் திகதி அறிவிக்கப்படும் என உத்தர விட்டது. (ஐ)

முறையற்ற கொள்கலன் விடுவிப்பு:

# அமைச்சர் பிமல், சுங்க ஆணையர்மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தயாசிறி ஜயசேகர எம். பி.

கொழும்பு, ஜூலை 19

**சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட கொள்கலன்கள் பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்டது முறையற்ற செயல் என ஜனாதிபதி நியமித்த விசாரணைக் குழு அறிவித்துள்ளது. இதன் அடிப்படையில், துறைமுக அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் சுங்கத் திணைக்களத்தின் பதில் ஆணையாளர் நாயகம் சீவலி அருட்கொட ஆகியோரை கைது செய்து விசாரணை நடத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.**

கொழும்பிலுள்ள தகவலறியும் ஆணைக்குழுவில் முற்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதி பெற்றவர்களின் பெயர் விபரங்களை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தி இருந்தார். 2008 முதல் 2024 ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்த அரசாங்கத்தின் போது நிதி பெற்ற அரசியல்வாதிகளின் பெயர் விவரங்களே வெளிப்படுத்தப்பட்டன.

2004 - 2008 வரையான காலப்பகுதியில் நிதி பெற்றவர்களின் விவரங்கள் வெளிப்படுத்தப்படவில்லை. அந்தக் காலப் பகுதியில் ஜே. வி. பியின் 39 உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியிருந்தனர். இவர்களும் ஜனாதிபதி நிதியத்திலிருந்து நிதி பெற்றிருந்தனர். அப்படியெனில், அதில் முறைகேடு இடம்பெற்றதா என்று கேள்வி எழுந்துள்ளது.

2004 - 2008 வரையான காலப்பகுதியில் நிதி பெற்றவர்களின் விவரத்தை தகவலறியும் உரிமை சட்டத்தின் ஊடாக பெற ஐந்து மாதங்கள் முயன்றேன். ஆனால், எனக்கு தகவல் தரப்படவில்லை. சுயாதீன தகவலறியும் ஆணைக்குழுவை மரணபடுக்கைக்கு கொண்டு செல்லவே அரசாங்கம் முயற்சிக்கிறது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# குற்ற சந்தேகநபர்களின் பாதுகாப்பை பலப்படுத்துக

## அமைச்சர் பிமல் உத்தரவு

கொழும்பு, ஜூலை 19

பெரும் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களை விமான நிலையம் ஊடாக அழைத்து வரும்போது அதிக பட்ச பாதுகாப்பை உறுதி செய்யுமாறு பதில் பொலிஸ்.மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கா இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத சாத்தியமான சிறப்பு வழியை பயன்படுத்துமாறும் அவர் அந்த உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

பாதாள உலகக் குழு சந்தேகநபர்களை கைது செய்து முகத்தை மூடி பொது பயணிகள் வரும் வழியில் அழைத்து வருவது பொருத்தமற்றது. இது பயணிகளிடையே அமைதியின்மையை உருவாக்குகிறது. இதேநேரம் சந்தேகநபர்களின் எதிரிகள், போட்டி நபர்கள் இலக்கு வைக்கவும் வசதியாகி விடும்.

இதுபோன்ற சம்பவங்கள் விமான நிலையத்திற்குள் நடந்தால் அது உயிர்களுக்கு ஆபத்தை விளைவிப்பதுடன், விமான நிலையத்தின் நற்பெயரையும் பாதுகாப்பையும் பாதிக்கும்- என்றும் அவர் கூறினார். (ஐ)

# சந்திரசேனவுக்கு மறியல் நீடிப்பு!

கொழும்பு, ஜூலை 19

முன்னாள் அமைச்சர் எஸ். எம் சந்திரசேனவை எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கடந்த 4ஆம் திகதி சந்திரசேன கைது செய்யப்பட்டார். 2015 ஜனாதிபதி தேர்தலின்போது 2.5 கோடி ரூபாய் பெறுமதி யான சோள விதைகளை, தமது ஆதரவாளர்களுக்கு விநியோகித்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

கோட்டாபய காலத்தில் வழங்கிய

# இழப்பீட்டை மீட்டெடுக்கக்கோரிய வழக்கு நவம்பரில் விசாரணைக்கு

கொழும்பு, ஜூலை 19

மே 9, 2022 அன்று காலி முகத்திடலில் உள்ள "கோட்டா கோ கம" போராட்டகாரர்கள் மீதான தாக்குதலுக்குப் பிறகு, முன்னாள் அமைச்சர்களின் வீடுகள், சொத்துகளுக்கு பொதுமக்கள் தீ வைத்ததால் ஏற்பட்ட இழப்புக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டு நிதியை மீட்டெடுக்க உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுவில் உண்மைகளை சரிபார்க்க எதிர்வரும் நவம்பர் 13 ஆம் திகதி விசாரணைக்கு உயர் நீதிமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

முன்னாள் அரசாங்க அமைச்சர்களால் சட்டவிரோதமாக பெறப்பட்டதாகக் கூறப்படும் இழப்பீட்டு நிதியை மீட்டெடுக்க உத்தரவிடக் கோரி சமூக ஆர்வலரும் சட்டத்தரணியுமான ரவீந்திரநாத் தாபரே இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

இந்த மனு, நீதியரசர்கள் மகிந்த சமயவர்த்தன, சோபித ராஜகருணா ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன் விசாரிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, முன்னாள் பாதுகாப்புப் பணியாளர்களின் தலைமைத் தளபதி சவேந்திர சில்வா, முன்னாள் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, முன்னாள் பொதுப் பாதுகாப்பு அமைச்சர்கள் டிரான் அலஸ் மற்றும் பிரசன்ன ரணதுங்க, தற்போதைய பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, தற்போதைய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்ட மொத்தம் 15 பேர் இந்த வழக்கில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

மே 9 தாக்குதலைத் தொடர்ந்து, முந்தைய அரசாங்கம் வீடுகள் மற்றும் சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்ட முன்னாள் அமைச்சர்கள் உட்பட 43 பேருக்கு ரூ. 112 கோடி இழப்பீடு வழங்கியதாக மனுதாரர் கூறுகிறார். இது பெப்ரவரி 5 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவால் வெளிப்படுத்தப்பட்டது என்பதை சுட்டிக் காட்டினார்.

இது, பொது நிதியை கடுமையாக தவறாகப் பயன்படுத்தியதாக மனுதாரர் வாதிடுகிறார். இயற்கை பேரழிவுகள் ஏற்பட்டாலும் கூட, ஒரு நபருக்கு அதிகபட்ச இழப்பீடு ரூ. 25 இலட்சம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இந்த கொடுப்பனவுகள் சட்ட நடைமுறைகள் மற்றும் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாக அறிவிக்கவும், சட்டவிரோதமாக வழங்கப்பட்ட இழப்பீட்டை மீட்டெடுக்க உத்தரவிடவும், எதிர்காலத்தில் எந்தவொரு இழப்பீடும் முறையான மதிப்பீடு மற்றும் சட்ட தரங்களின் அடிப்படையில் வழங்கப்படுவதை உறுதி செய்யவும் மனுதாரர் உயர் நீதிமன்றத்தை கோரினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ. ஐ. பயன்பாட்டால் இளையோர் மனநல பாதிப்புக்குள்ளாகின்றனர்

## மனநல மருத்துவர் தனுஜ மகேஷ்

கொழும்பு, ஜுலை 19

**செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டால் இளையோர் மனநல பாதிப்புக்கு உள்ளாகின்றனர். எனினும், அது தற்போதுவரை வெளியாகமல் உள்ளது என்று மனநல மருத்துவர் தனுஜ மகேஷ் தெரிவித்துள்ளார்.**

தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு அவர் அளித்த நேர் காணலிலேயே மேற்கண்ட வாறு கூறினார்.

செயற்கை நுண்ணறிவு தொடர்பில் இலங்கை மக்க ளுக்கு சரியான புரிதல் இது வரை வழங்கப்படவில்லை. அதன் பாவனை தொடர்பான சட்டம் உருவாக்கப்படவில்லை. நாம் அது தொடர்பில் அவசர மான செயல்பாட்டில் இறங்கா விட்டால் எமது சந்ததிகள் பெரும் மனநல நெருக்க டிக்கு உள்ளாகலாம்.

சிகிச்சைக்காக வந்த பல்க லைக்கழக மாணவர் ஒருவர் தனது காதலி தன்னை விட்டு போய்விட்டார் என்று அழுது கொண்டே வந்தார்.

அந்த சந்தர்ப்பத்தில் மாண வன் தன் உயிரை மாய்க்கும் மனநிலையில் இருந்தார். பின் னர் நான் கதைத்த போதுதான் அது செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்பட்டது என்றும் மென்பொருளில் ஏற்பட்ட பிரச்னையில் அது அழிந்து போனதும் தெரிய வந்தது.

இதேவேளை உயர் தரம் கற்கும் மாணவி ஒருவர் நள்ளி ரவு 12 மணிக்கு வெளியே ஓடி னார் என்று கூறி அவரின் பெற் றோர் அழைத்து வந்தனர்.

மற்றொரு மாணவியிடம் கதைத்த போது அம்மா திட்டி யதால் என் நண்பன் சொன்னதை கேட்டு வெளியில் சென்றேன் என்று கூறினார் அந்த மாணவி. விசாரித்ததில் அது செயற்கை நுண்ணறிவு மூலமான உரையா டல் என்பது தெரிய வந்தது. செயற்கை நுண்ணறிவை ஒரு பணியாளராக பயன்படுத்தி னால் உங்களுக்கு பல நன்மை களை பயக்கும்.

அதை உங்களுக்கு மேலா னதாக கருத வேண்டாம் - என் றும் அவர் இதன்போது கூறி னார். (ஐ)

# 500 தேயிலை உற்பத்தி சிறு கிராமங்கள் உருவாக்கப்படும்

## பெருந்தோட்ட அமைச்சர்



கொழும்பு, ஜுலை 19

தேசிய மக்கள் சக்தி அரசாங் கத்தின் கீழ் 500 தேயிலை உற் பத்தி சிறு கிராமங்கள் உருவாக் கப்படும் என பெருந்தோட்ட மற்றும் தோட்ட உட்கட்ட மைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்ட சிறு தேயிலை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் நடத்தப்பட்ட நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "கடந்த காலங் களில் தேயிலைத் தொழிற்து றையை முன்னேற்றுவதாகக் கூறி, சர்வதேச நாடுகளில் விளம்பரங்களை வெளியிடு வதற்காக மட்டும் 19 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவி டப்பட்டுள்ளது.

உலக வங்கியிடமிருந்து 4. 89 கோடி டொலர்கள் பெறப் பட்டுள்ளன. இதில், 60 வேலைத்திட்டங்கள் தோல்வி யடைந்துள்ளன. இந்தத் திட் டங்களுக்காக முன்னாள் அமைச்சர் தயா கமகேவின் மனைவி, லக்ஷ்மன் செனவி ரத்னவின் மகன் மற்றும் சாலிய திஸநாயக்கவின் மனைவி ஆகியோர் பணம் பெற்றுள்ள னர். இது விடயத்தில் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்ப டும் - என்றும் கூறினார். (ஐ)

# ரயில் மோதி யானை பலி!





கொழும்பு, ஜுலை 09

கொழும்பிலிருந்து மட்டக் களப்பு சென்ற ரயில் மோதிய தில் காட்டு யானை ஒன்று உயி ரிழந்தது.

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை பொலநறுவை - கல் லெல்ல பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த யானை அதிகாலை 3 மணி முதல் கிராமத்தின் வயல் நிலங்களில் சுற்றித் திரிந்துள்ளது.

இந்த நிலையிலேயே யானை ரயில் மோதியதில் உயி ரிழந்ததாக கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# கண்டி பெரஹராவை முன்னிட்டு 29 பாடசாலைகளுக்கு விடுமுறை

கண்டி, ஜுலை 19

கண்டி எசல பெரஹராவை முன்னிட்டு அந்தப் பகுதியிலுள்ள 29 பாடசாலைகள் இரண்டாம் தவணை விடுமுறைக்காக எதிர்வரும் 29ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 4ஆம் திகதி வரை மூடப்படவுள்ளன என்று கண்டி வலய கல்வி பணிமனை அறிவித்துள்ளது.

கண்டியில் வருடாந்த எசல பெரஹராவின் போது எதிர் பார்க்கப்படும் போக்குவரத்து நெரிசல், போக்குவரத்து சவால்கள் காரணமாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட் டுள்ளது.

நாட்டின் மிக முக்கியமான கலாசார மற்றும் மத விழாக்க ளில் ஒன்றான எசல பெரஹரா எதிர்வரும் 30ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 9 வரை நடைபெறவுள்ளது.

மேலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் படைத் தரப் பின் தங்குமிடங்களாக பயன் படுத்தப்படும். இதனால் விடு முறை வழங்கப்பட்டுள்ள பாட சாலை நாட்களுக்குப் பதிலாக வேறு நாட்களில் பாடசாலையை நடத்துவது தொடர்பான யோச னையை சமர்ப்பிக்குமாறும் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தவிர, ஒகஸ்ட் 5, 6 மற்றும் 7 ஆகிய திகதிகளை உள்ளடக்கிய தாக பாடசாலை விடுமுறையை நீடிப்பது அவசியமா என்பதை தெளிவுபடுத்துமாறும் பாடசா லைகளின் அதிபர்கள் அறிவு றுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

# என் உயிருக்கு ஆபத்துநேர முன்னர் காப்பாற்றுங்கள்

## சவூதிக்கு பணிப்பெண்ணாக சென்றவர் கோரிக்கை

கொழும்பு, ஜுலை 19

சவூதி அரேபியாவுக்கு பணிப்பெண்ணாகச் சென்ற இலங்கை பெண் ஒருவர் தன் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள் ளது என்றும் தன்னை விரை வாக காப்பாற்ற வேண்டும் என வும் கோரிக்கை விடுத்துள்ளார்.

"ஒரு வருடமாக என்னை அடித்து, அவமானப்படுத்தி, கடுமையான வேலை கொடுத்து துன்புறுத்தி வருகின்றனர். வீட்டு உரிமையாளர்கள் சாப்பிட்டு குப்பையில் போடும் மீதியை நான் பல மாதங்களாக சாப்பிட்டு வருகிறேன். அவர் கள் என்னை ஒரு இருட்டு அறையில் அடைத்து, சித்திர வதை செய்கிறார்கள். எனக்கு பல மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை. என்னைக் கொல்வதற்கு முன்பு என்னை இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுங்கள்-" என் றும் அவர் கோரிக்கை விடுத் துள்ளார்.

ஜி. பி. தம்மிக பத்ம குமாரி என்பவரே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். 51 வயதான அவர் ஒரு பிள்ளையின் தாய் என்றும் மகளை படிப்பிக்கவும், நிரந்தர வீடு ஒன்றை கட்டுவ தற்காகவும் வீட்டுப் பணிப் பெண்ணாக கடந்த 2024 ஜுலை 3ஆம் திகதி சவூதிக்கு சென்றார் என்றும் கூறப்பட் டுள்ளது.

தன்னை இலங்கை அழைத்து வருவதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஏழரை இலட்சம் ரூபாயை கோரியதாக தம்மிக பத்ம குமா ரியின் மகள் குமுதுனி தாருகா கமகே தெரிவித்துள்ளார்.

தனது தாயாரை வீட்டு உரி மையாளர்கள் தாக்கி அவரது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதற்கு முன்பு, இலங்கைக்கு அழைத்து வர தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வெளிவிவகார அமைச்சரிடமும் ஜனாதிபதி டமும் கேட்டுக்கொள்வதாக வும் அவர் மேலும் கூறியுள் ளார்.

# ஒரு வாரத்தில் 3,283 பேர் கைது

கொழும்பு, ஜுலை 19

கடந்த 11ஆம் திகதி முதல் நடத்தப்பட்ட தேடுதல் நடவ டிக்கைகளில் போதைப்பொ ருட்களுடன் 3 ஆயிரத்து 283 பேர் கைது செய்யப்பட்டுள்ள னர் என்று பொலிஸ் திணைக்க ளம் அறிவித்துள்ளது.

ஒரு கிலோ 733 கிராம் ஹெரோ யின், 19 கிராம் 615 கிராம் ஹசிஷ் போதைப் பொருளுடன் ஆயி ரத்து 147 பேர், 2 கிலோ 375 கிராம் ஐஸ் போதைப்பொருளு டன் ஆயிரத்து 129 பேர் கைதாகினர்.

அத்துடன், 2 ஆயிரத்து 464 போதை மாத்திரைகள், 784 சட் டவிரோத சிகரெட்கள், 5 ஆயி ரத்து 923 கஞ்சா செடிகள் என் பனவும் கைப்பற்றப்பட்டன என் றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஒன்பது வளைவு பாலத்தை இரவிலும் பார்க்க வாய்ப்பு

கொழும்பு, ஜுலை 19

பதுளை - எல்ல ஒன்பது வளைவு பாலத்தை சுற்றுலா பய ணிகள் இரவிலும் பார்வையி டக்கூடியவாறு மேம்படுத்த புகையிரத திணைக்களமும் மத்திய கலாசார நிதியமும் இணைந்து புதிய திட்டத்தை ஆரம்பித்துள்ளன.

இந்தத் திட்டத்தின் நோக் கம், இரவு நேரத்தில் மின் விளக் குகளால் பாலத்தை ஒளிரச் செய்து சுற்றுலா பயணிகள் பார்வையி டும் வாய்ப்பை ஏற்படுத்துவதா கும் என்று புகையிரதத் திணைக் களம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதல் நடைமு றைக்கு வரும் என்று புகையிர தத் திணைக்கள பொது முகா மையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

மேலும், "இப்பகுதி மேம் படுத்தப்பட்டு சுற்றுலா பயணி களின் ஈர்ப்பு அதிகரித்த பின் னர், பார்வையிடுவதற்கு குறிப் பிட்ட கட்டணம் வசூலிக்கப்ப டும். உள்ளூர் சுற்றுலா பயணி களுக்கு குறைந்தபட்ச கட்ட ணம் அறவிடப்படும்.

நானுஓயா ரயில் நிலையம் அருகே ரயில் பெட்டிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட சுற்றுலா ஹோட்டல் உருவாக் கப்பட்டுள்ளது. ஒகஸ்ட் தொடக் கத்தில் இதை மேம்படுத்தி சுற் றுலாப் பயணிகளுக்குத் திறப்ப தற்கு எதிர்பார்க்கிறோம் - என் றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# கொழும்பில் கடத்தப்பட்ட சிறுவன் இரத்தினபுரியில் மீட்பு

கொழும்பு, ஜுலை 19

கொழும்பு - கஹவத்தையில் கடத்தப்பட்ட 15 வயது சிறு வன் ஒருவன் இரத்தினபுரி பகுதி யில் மீட்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், இரத்தின புரி - கெடன்தொல - புதிய [illegible] நின் அருகே நின்ற சிறுவன் தொடர்பில் பொலிஸ் அவசர பிரிவுக்கு தகவல் தெரிவிக்கப் பட்டது.இதையடுத்து, அங்கு வந்த பொலிஸார் சிறுவனை பொலிஸ் நிலையத்துக்கு அழைத் துச் சென்றனர்.

கடத்தப்பட்ட வானிலிருந்து தான் குதித்துத் தப்பினார் என்று சிறுவன் பொலிஸாரிடம் தெரி வித்துள்ளார்.சிறுவனைக் கடத்திய குழு வைக் கண்டறிய, கஹதுடுவ பொலிஸார் சி. சி. ரீ. வி. பதிவு களை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை முன் னெடுத்து வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# துப்பாக்கிசூட்டில் காயமடைந்த 13 யானைகள் சிகிச்சையில்

## வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்

கொழும்பு, ஜூலை 19

துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி 13 யானைகள் சிகிச்சை பெற்று வருகின்றன என்று வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மையில், பாத்தியா என்று அழைக்கப்பட்ட யானை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தது. இந்த நிலையிலேயே மேற்கண்ட தகவலை வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் மருத்துவர் தாரக பிரசாத் வெளியிட்டுள்ளார்.

அவரின் தகவலின்படி, அநுராதபுரத்தில் 7 யானைகள், பொலநறுவையில் 3, வவுனியாவில் 1 மற்றும் வேறிடங்களில் 2 யானைகள் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகின்றன.

நாட்டில் 20 சதவீதமான யானைகளின் இறப்புக்கு துப்பாக்கிச்சூடுகளே காரணம். இது விடயத்தில் வனஜீவராசிகள் திணைக்களம் கரிசனை கொண்டுள்ளதுடன், நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

# இந்திய நடிகர் ஷாருக் கான் இலங்கைக்கு வரமாட்டார்

கொழும்பு, ஜூலை 19

எதிர்வரும் ஒகஸ்ட் 2ஆம் திகதி கொழும்பு துறைமுக நகரிலுள்ள சூதாட்ட விடுதி திறப்பு விழாவில் இந்திய நடிகர் ஷாருக் கான் கலந்து கொள்ள மாட்டார் என்று சிற்றி ஒவ் ட்ரீம்ஸ் ஹோட்டல் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்தத் தகவலை ஹோட்டல் நிர்வாகம் தனது உத்தியோகபூர்வ சமூக வலைத்தளம் மூலம் உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும், ஷாருக் கான் இந்த நிகழ்வில் கலந்து கொள்வார் என்று அறிவித்திருந்தாலும் தனிப்பட்ட காரணங்களால் அவர் பங்கேற்க மாட்டார் - என்றும் அந்தத் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இளம் தொழில்முனைவோரை குறிவைத்து இலங்கையில் மோசடி

## எச்சரிக்கிறது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, ஜூலை 19

ஐரோப்பிய ஒன்றிய அதிகாரியாக ஆள்மாறாட்டம் செய்து ஒருவர் இலங்கை மக்களை ஏமாற்றி வருகிறார். இது விடயத்தில் இலங்கை மக்கள் விழிப்பாக செயல்பட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மானியங்கள் மற்றும் நிதி உதவிகளை வழங்குவதாகக் கூறி அவர் மோசடியில் ஈடுபட்டுள்ளார் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அதிகாரபூர்வ அறிவிப்பில், சம்பந்தப்பட்டவர் இளம் தொழில்முனைவோரை அணுகி, ஐரோப்பிய ஒன்றிய மானியங்கள் அல்லது நிதி வாய்ப்புகளை வழங்குவதாகக் கூறுகிறார். அத்துடன், தவறான வாக்குறுதிகளின் அடிப்படையில் பணம் செலுத்துமாறு அவர்களை மோசடி செய்பவர் கோரியுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

இந்நிலையில் இது ஒரு மோசடி என்று குறிப்பிட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம், அனைத்து ஐரோப்பிய ஒன்றிய மானியங்களும் ஒப்பந்தங்களும் திட்டங்களின் சமர்ப்பிப்பு மற்றும் மதிப்பீடு உள்ளிட்ட அதிகார பூர்வ தேர்வு நடைமுறைகள் மூலம் மாத்திரமே வழங்கப்படுகின்றன.

நிதியுதவியை எளிதாக்க மூன்றாம் தரப்பு முகவர்களை ஈடுபடுத்துவதில்லை. மானிய விண்ணப்பங்கள் அல்லது கொள்முதல் கேள்விப்பத்திரங்களை செயலாக்குவதற்கு தனி ஆட்கள் அல்லது அமைப்புகளிடமிருந்து பணம் கோருவதில்லை என்றும் ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

# நான்கு துப்பாக்கிகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது

கொழும்பு, ஜூலை 19

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் உட்பட 4 துப்பாக்கிகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா - கட்டானை - தெமன்ஹந்தி பகுதியில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. இதன்போது, 51, 58 வயதுடைய நபர்களே கைது செய்யப்பட்டனர்.

ஒரு சந்தேகநபரிடமிருந்து ரிவால்வர் வகை துப்பாக்கி, ரி-56 துப்பாக்கியின் தோட்டாக்களை பயன்படுத்தி சுடவல்ல உள்நாட்டு துப்பாக்கி மற்றும் துப்பாக்கி தயாரிப்பதற்கான உபகரணங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டன. மற்றொரு சந்தேகநபரிடம் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரு துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நீர்கொழும்பு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# குற்றவாளிகளை பாதுகாக்கவே ரணில் - ராஜபக்ஷ தரப்பு முயன்றது

## அமைச்சர் பிமல் ரத்நாயக்கா



கொழும்பு, ஜூலை 19

**"கொலை குற்றவாளிகளை பாதுகாக்கவே ரணில் - ராஜபக்ஷ தரப்பு ஷானி அபேசேகர, ரவி செனவிரத்ன உள்ளிட்ட திறமையான அதிகாரிகளை பதவியிலிருந்து நீக்கியது. நாம் விசாரணைகளில் திறமையான அதிகாரிகளை ஈடுபடுத்துவோம். குற்றவாளிகளை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுப்போம்" - என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்கா தெரிவித்துள்ளார்.**

தெகிவளை ரயில் நிலையத்துக்கு கண்காணிப்பு பயணம் சென்றபோது ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று கொடுக்குமாறு கர்தினால் உட்பட கத்தோலிக்க திருச்சபை தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகிறது. எம்மிடம் மாத்திரமல்ல, இதற்கு முன்னர் பதவியிலிருந்த அரசாங்கத்திடமும் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டது.


ஆனால், என்ன நடந்தது? குற்றத்தை மறைப்பதற்கு செய்யக்கூடிய ஒரு வழிமுறையே அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்குவதாகும். இதற்கமைய கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்த பின்னர் சி.ஐ.டியில் இருந்த 600இற்கும் மேற்பட்ட அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கினார்.

இதேபோன்று அதிகாரிகளை பதவி நீக்கம் செய்தனர். விளக்கமறியலில் வைத்தனர். சாட்சியங்களை திரட்டும் திறமையான அதிகாரிகளுக்கு பதிலாக திறமையற்ற அதிகாரிகளை பதவிகளுக்கு அமர்த்தினார்கள்.

ரணில் -ராஜபக்ஷ தரப்பு ஊழல் மோசடியில் ஈடுபட்டது ஒருபுறம் இருக்க பொலிஸ் திணைக்களம், குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றை குற்றவாளிகளை பாதுகாக்கவே பயன்படுத்தினார்கள்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள திறமையான அதிகாரிகளை நியமிக்குமாறு கர்தினால் மாத்திரம் அல்ல முழு கத்தோலிக்க சமூகமும் எம்மிடம் கோரிக்கை விடுத்தது. கொலை குற்றவாளிகளை பாதுகாக்கவே ரணில் - ராஜபக்ஷ தரப்பு ஷானி அபேசேகர, ரவி செனவிரத்ன உள்ளிட்ட திறமையான அதிகாரிகளை பதவியில் இருந்து நீக்கியது. ஆனால், எமக்கு எந்த தனிப்பட்ட தேவையும் கிடையாது. எனவே, நாம் விசாரணைகளுக்காக திறமையான அதிகாரிகளை ஈடுபடுத்துவோம். குற்றவாளிகளை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுப்போம் - என்றார். (ஐ)

# மெழுகு அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார் ஜனாதிபதி



கண்டி, ஜூலை 19

மலையக இராசதானியின் வரலாற்றை கூறும்விதமாக அமைக்கப்பட்ட மெழுகு அருங்காட்சியகம் கண்டி தலதா மாளிகையின் எஹெலேபொல வளவில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவால் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையால் புதுப்பிக்கப்பட்ட எஹெலேபொல வளவின் தொல்பொருள், கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

எஹெலேபொல வளவின் ஒரு பகுதியாக இருக்கும் மலைநாட்டு இராச்சியத்தின் கட்டடக்கலை, பழக்கவழக்கங்கள், கலைகள் இங்கு மெழுகைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளன. பாரம்பரிய கைவினைப் பொருட்கள் தொடர்பான கண்காட்சி அரங்குகளுடன் பண்டைய உணவகமும் நிறுவப்பட்டுள்ளன.

வெலிவிட்ட சரணங்கர சங்கராஜ தேரர், வாரியபொல சுமங்கல தேரர், மன்னர் விமல தர்மசூரிய, குசுமாசன தேவி, மொனரவில கெப்பட்டிபொல, தேவேந்திர முலாச்சாரி, ஆளுநர் றொபர்ட் பிரவுன்றிக், எஹெலேபொல மகா அதிகாரம், குமாரிஹாமி அவரின் இரு பிள்ளைகள் உட்பட வரலாற்றில் முக்கியமான 35 நபர்களின் மெழுகு உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சுமார் 30 கோடி ரூபாய் செலவில் இந்த அருங்காட்சியகம் தலதா மாளிகையின் எஹெலேபொல வளவில் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விபத்தில் இருவர் காயம்

கொழும்பு, ஜூலை 19

கார் மோட்டார் சைக்கிளை மோதிய விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

கொழும்பு - மஹரகம நாவின்ன ரயில் நிலையம் அருகாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களே காயமடைந்தனர். அவர்கள் இருவரும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# பிறந்த சிசுவை வயலில் கைவிட்டு சென்ற தாய்

கொழும்பு, ஜூலை 19

பிறந்து இரண்டு நாட்களேயான சிசு வயல்வெளியிலிருந்து உயிருடன் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

குருநாகல் - மாவத்தகம - பரகஹதெனிய - சிங்கபுர பிரதேசத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வயல் பகுதியில் குழந்தை ஒன்று இருப்பதாக பிரதேச வாசிகள் வழங்கிய தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் குழந்தையை மீட்டனர்.

மீட்கப்பட்ட குழந்தை மாவத்தகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது.

குழந்தை ஆரோக்கியமாக இருப்பதாக மருத்துவமனை தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# உடனடியாக இடமாற்றம் வேண்டும் உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம்



திருகோணமலை, ஜூலை 19

**நிறுத்தப்பட்ட இடமாற்றத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தக் கோரி திருகோணமலை, மொரவெவ பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

மொரவெவ பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறவிருந்த நேரத்தில் மாவட்ட செயலகத்தால் நிறுத்தப்பட்ட இடமாற்றத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பிரதேச செயலகத்தின் பிரதான நுழைவாயிலை மூடி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல வருட காலமாக மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவில் இடமாற்றம் கிடைக்காமல் பலர் இருக்கின்றபோது, சிலர் நகர்ப் பகுதியில் வேலை செய்ய வேண்டும் என்பதற்காக இடமாற்றத்தை நிறுத்தியுள்ளதாகவும், முறையான இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தக்கோரி "அரசே இடமாற்றத்தில் இடம் பெறும் பாரபட்சங்களை நிறுத்து" "நியாயமான வருடாந்த இடமாற்றத்தை நடைமுறைப்படுத்து" "இடமாற்றத்தில் தொழிற்சங்கத்தின் ஒருதலைபட்ச தலையீட்டை நிறுத்து" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது குறித்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்துக்கு வருகைதந்த பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன உட்பட அதிகாரிகளை உள்ளே செல்ல விடாமல் தடுத்து தமக்கு நியாயமான தீர்வை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் பிரதேச அபிவிருத்தி குழுக்கூட்டத்தை நடத்துவதற்கு இடமளிக்குமாறும் தங்களுடைய கோரிக்கைக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தருவதாகவும், இது தொடர்பில் அரசாங்க அதிபருடன் கலந்துரையாடுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் கூறியதை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர். (எ)



# பொத்துவில் பிரதேசத்தின் ஒருங்கிணைப்பு கூட்டம்

பொத்துவில், ஜூலை 19

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் பிரதேச செயலாளர் ஏ. நஸீல் ஏற்பாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பொத்துவில் பிரதேச செயலக கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்றது.

இதில், பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம். முஷாரப் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள், உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (எ)

# வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு கிழக்கு மாகாண ஆளுநர் பயணம்

கல்முனை, ஜூலை 19

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர மற்றும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ரத்வத்த ஆகியோர் நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டத்தின் தெஹியத்தகண்டிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டனர்.

குறித்த அலுவலகத்தின் தற்போதைய நிலை மற்றும் எதிர்கொண்டிருக்கும் சிக்கல்கள் குறித்து அதிகாரிகளிடமிருந்து விளக்கங்களை பெற்றுக் கொண்டதுடன், தேவையான நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் மருத்துவ அதிகாரிகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (எ)

# காச நோயை கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டம்

## தாதிய உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி

கல்முனை, ஜூலை 19

அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்தியத்திலிருந்து காச நோயை இல்லாதொழிக்கும் நோக்கில், பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலையம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இந்த வேலைத்திட்டத்துக்கு இணங்க காச நோயை கட்டுப்படுத்துதல், இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையாக சிகிச்சை அளித்தல் தொடர்பாக தாதிய உத்தியோகத்தர்களின் திறனை மேம்படுத்தும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட திறன் விருத்தி பயிற்சி செயலமர்வு கடந்த திங்கட்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமை ஆகிய இரு தினங்கள் பிராந்திய பணிமனையில் நடைபெற்றது.

பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலையத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ. கபூர் ஒருங்கிணைப்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகிலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்த செயலமர்வில் பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலையத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரி குறித்த செயலமர்வின் நோக்கம் பற்றியும், காச நோய் தொடர்பாகவும் கடந்த கால புள்ளி விவரங்களுடன் விளக்கமளித்தார். அத்துடன் காச நோயை எதிர்காலத்தில் பிராந்தியத்தில் முற்று முழுதாக இல்லாதொழிப்பதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விளக்கமளித்தார். (எ-06)

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும்

மூதூர், ஜூலை 19

திருகோணமலை மாவட்டம் மூதூர் வலயக் கல்வி பிரிவுக்குட்பட்ட ஈச்சிலம்பற்றில் உள்ள திருவள்ளுவர் வித்தியாலயத்துக்கு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் நேற்று முன்தினம் பயணம் ஒன்றை மேற்கொண்டார். அங்கு நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளிட்ட பௌதீக வளங்கள் பற்றாக்குறை தொடர்பில் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பாராளுமன்ற உறுப்பினரிடம் எடுத்துரைத்தனர்.

இந்த பாடசாலையில் 470இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் நிலையில் கணிதம், சமயம், விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர்கள் இன்மையால் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். மேலும் கட்டட வசதி உட்பட சிற்றூழியர் பற்றாக்குறை நிலவி வருவதாகவும் தெரிவித்தனர். இது தொடர்பான மகஜர் ஒன்றை பாடசாலை சார்பில் பாராளுமன்ற உறுப்பினரிடம் கையளித்தனர். (எ)

# சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்து நிறுத்த வேண்டும்

## இம்ரான் எம். பி. கோரிக்கை

திருகோணமலை, ஜூலை 19

வெருகல் நாதன் ஓடையில் மணல் அகழ்வுக்காக அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. இங்கு மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் தமக்கு வழங்கப்பட்ட அளவுக்கு அதிகமாக சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டு வருவதாகவும், இதன் காரணமாக மாரி காலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதாகவும் இதனால் பொது மக்கள் பாதிக்கப்படுகின்றனர் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

வெருகல் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று முன்தினம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது தனது பிரேரணைகளை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், அனுமதி வழங்கப்பட்ட அளவுக்கு மேலதிகமாக மணல் அகழ்வதனையும், புதிதாக மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்குவதனையும் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பொது மக்கள் கூறுகின்றனர்.

எனவே, வெள்ளப்பெருக்கு, சுற்றாடல் பிரச்னைகளைக் கருத்தில்கொண்டு வழங்கப்பட்ட அனுமதிக்கு மேலதிகமாக மணல் அகழ்வதனையும், புதிதாக மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்காதிருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.



முத்துச்சேனை பொது விளையாட்டு மைதானம் விளையாட முடியாத அளவுக்கு பள்ளமும், குழியுமாக காணப்படுகின்றது. இதன் காரணமாக இப்பகுதியிலுள்ள விளையாட்டு வீரர்கள் தமது விளையாட்டு திறமைகளை வெளிக்கொணர முடியாத நிலையில் உள்ளனர். மேலும் அருகிலுள்ள முத்துச்சேனை அரசினர் கலவன் பாடசாலையினரும் மேற்படி மைதானத்தையே பயன்படுத்தி வருகின்றனர். எனவே, முத்துச்சேனை கிராமத்திலுள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் முத்துச்சேனை அரசினர் கலவன் பாடசாலை மாணவர்களின் நலன்கருதி மேற்படி மைதானத்தை விளையாடுவதற்கு ஏற்ற வகையில் புனரமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வெருகல் பிரதேச செயலக பிரிவின் எல்லை சரியாக அடையாளப்படுத்தப் படாமையால் சேருவில பிரதேசத்தைச் சேர்ந்தவர்களால் வெருகல் பிரதேசத்திலுள்ள காணிகள் அபகரிக்கப்படும் செயல்பாடுகள் அதிகரித்து வருகின்றன.

எனவே, வெருகல் பிரதேச செயலகத்துக்குரிய எல்லையை நான்கு பக்கமும் அடையாளப்படுத்தி எல்லையிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# மின்சாரம் தாக்கி ஒருவர் பலி

கல்முனை, ஜூலை 19

அம்பாறை உஹண கலஹிடியாகொட கிராமத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்தார்.


பூசணிக்காய் தோட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்கியே இவர் உயிரிழந்ததாக ஆரம்ப கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றதுடன் மின்சாரம் தாக்கிய நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

உஹண பொலிஸ் நிலைய அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு சென்று, பூசணிக்காய் பயிரிடப்பட்ட நிலத்துக்கு சட்டவிரோதமாக மின்சார இணைப்பை பெற்ற நபரை கைது செய்தனர். இச்சம்பவத்தில் மின்சாரம் தாக்கி இறந்தவர் கலஹிடியாகொட கிராமத்தைச் சேர்ந்த கெலும் நாமல் (வயது - 30) எனத் தெரியவந்துள்ளது. (எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிக வளாகத்தில் தீ விபத்து ஈராக்கில் 61 பேர் உயிரிழப்பு!



**பக்தாத், ஜூலை 19**

**ஈராக்கில் வணிக வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி பெண்கள், குழந்தைகள் உட்பட 61 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்து குறித்து விசாரணை நடத்த உத்தர விடப்பட்டுள்ளது.**

கிழக்கு ஈராக்கின் வசிட் மாகாணம் குட் நகரில் ஒரு வாரத்துக்கு முன்பு புதிய வணிக வளாகம் திறக்கப்பட்டது. 5 தளங்களைக் கொண்ட இந்த வணிக வளாகத்தில் உணவகம், சுப்பர் மார்க்கெட் உள்ளிட்டவை இயங்கி வருகின்றன. இந்த நிலையில், புதன்கிழமை இரவு அந்த வணிக வளாகத்தில் தீ விபத்து ஏற்பட்டது. இதையடுத்து தீ மளமளவென பரவியது. இது குறித்து தகவல் அறிந்த தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். மீட்புப் படையினரும் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதனிடையே, பிரதமர் முகமது ஷியா அல்-சுதானி உத்தரவின் பேரில் உள்துறை அமைச்சர் சம்பவ இடத்துக்குச் சென்று மீட்புப் பணிகளை முடுக்கிவிட்டார். இதுகுறித்து ஈராக் உள்துறை அமைச்சர் வெளியிட்ட அறிக்கையில், "வணிக வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி பெண்கள், குழந்தைகள் உட்பட 61 பேர் உயிரிழந்தனர். இதில் 14 பேரின் உடல்கள் அடையாளம் காண முடியாத வகையில் கருகின. 45இற்கும் மேற்பட்டோரை மீட்புக் குழுவினர் பத்திரமாக மீட்டனர்" என கூறப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பான வீடியோ மற்றும் படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றன. கட்டட உரிமையாளர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதுகுறித்து மாகாண ஆளுநர் முகமது அல்-மயே வெளியிட்ட அறிக்கையில், "வணிக வளாக தீ விபத்தை அடுத்து 3 நாட்களுக்கு துக்கம் அனுசரிக்கப்படுகிறது.

தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணைக்கு உத்தர விடப்பட்டுள்ளது. (எ)

# நெதன்யாகு மீதான பிடியாணையை ஒருபோதும் இரத்து செய்ய முடியாது

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நிராகரிப்பு

ஜெனிவா, ஜூலை 19

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர்களுக்கு எதிரான பிடியாணையை இரத்துச் செய்ய வேண்டும். ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன பகுதிகளில் இடம்பெறும் குற்றச் செயல்கள் குறித்த விசாரணைகளை கைவிட வேண்டும் போன்ற இஸ்ரேலின் வேண்டுகோளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பலஸ்தீன பகுதிகளில் இழைக்கப்படும் குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு சர்வதேச நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் இல்லை என்ற இஸ்ரேலின் வாதத்தை நிராகரித்துள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அதன் முந்தைய தீர்ப்பை மீண்டும் உறுதி செய்துள்ளது.

பலஸ்தீனம் தனது கருத்துக்களை முன்வைப்பதற்கு இடமளிக்கக் கூடாது என்ற இஸ்ரேலின் வேண்டுகோளையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. (எ)

# ஐஸ்லாந்தில் எரிமலை வெடிப்பு




ரெய்க்ஜாவிக், ஜூலை 19

ஐஸ்லாந்தில் எரிமலை வெடித்து சிதறியது.

ஐரோப்பாவில் அமைந்துள்ள நாடு ஐஸ்லாந்து. இந்த நாட்டில் 100இற்கும் மேற்பட்ட எரிமலைகள் உள்ளன. இதில் பல எரிமலைகள் உயிர்ப்புடன் உள்ளன.

இந்த நிலையில், ஐஸ்லாந் தின் ரெய்க்ஜென்ஸ் தீபகற்பத்தில் உள்ள எரிமலை திடீரென வெடித்து சிதறியது. இதனால், எரிமலையிலிருந்து லாவா குழம்பு வெளியேறி வருகிறது. இதன் காரணமாக எரிமலைக்கு அருகே உள்ள கிரிண்டவிக் நகரிலிருந்து சுற்றுலாப் பயணிகள், பொது மக்கள் எனப் பலர் வெளியேற்றப்பட்டுள்ளனர். அப்பகுதியில் உள்ள சுற்றுலாத் தலங்களும் மூடப்பட்டுள்ளன. (எ)



# சைபர் குற்றத்தில் ஈடுபட்ட 1000 பேர் அதிரடியாக கைது

நாம்பென், ஜூலை 19

கம்போடியாவில் சைபர் குற்றத்தில் ஈடுபட்ட 1000 பேர் கைது செய்யப்பட்டனர். இது குறித்து

கம்போடியா அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது, இணையவழி மோசடிகள் தொடர்பில் ஐந்து மாகாணங்களில் தீவிர சோதனை நடத்தப்பட்டது. இதில், 1000 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில், 200இற்கும் மேற்பட்டவர்கள் வியட்நாம் நாட்டை சேர்ந்தவர்கள். 27 பேர் சீனர்கள், 75 பேர் தாய்வானை சேர்ந்தவர்கள். உள் நாட்டைச் சேர்ந்த 85 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து கணினிகள், அதிநவீன தொலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.(எ)

# மிகப்பெரிய விண்கல் ஏலம்

நியூயோர்க், ஜூலை 19

பூமியில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட செவ்வாய்க் கிரகத்தின் மிகப்பெரிய அரியவகை விண்கல் 4. 3 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் ஏல நிகழ்வு கடந்த புதன்கிழமை சோத்பியின் நிறுவனத்தால் நடத்தப்பட்டது.

என். டபிள்யு. ஏ. 16788 என அழைக்கப்படும் இந்த விண்கல் 24.5 கிலோ எடையும் சுமார் 38.1 சென்ரி மீற்றர் நீளமும் கொண்டது என சோத்பிஸ் தெரிவித்துள்ளது.

இந்த விண்கல் பாறை 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நைஜரின் தொலைதூரப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் செவ்வாய்க் கிரகத்தின் அடுத்த பெரிய பகுதியை விட 70 சதவீதம் பெரியது என்று ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது. (எ)

# ஷேக் ஹசீனா ஆதரவாளர்கள் பொலிஸார் இடையே மோதல்

## பங்களாதேஷில் நால்வர் உயிரிழப்பு

டாக்கா, ஜூலை 19

பங்களாதேஷில் ஷேக் ஹசீனா ஆதரவாளர்களுக்கும் பொலிஸார், படையினர் இடையே இடம்பெற்ற மோதலில் நால்வர் உயிரிழந்தனர், 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பங்களாதேஷின் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனாவுக்கு எதிராக கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் மாணவர்கள் நடத்திய போராட்டம் காரணமாக அவர் தனது பதவியை இழந்து, அங்கிருந்து தப்பி இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார். போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் அமைப்பு சார்பில், நோபல் பரிசு பெற்ற முகம்மது யூனுஸ் இடைக்கால தலைவராக தெரிவு செய்யப்பட்டார். மாணவர்கள் பலர் அமைச்சர்களாக பொறுப்பேற்றனர்.

பங்களாதேஷின் அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய இந்த நிகழ்வு ஓராண்டை நிறைவு செய்யவுள்ளதை முன்னிட்டு, மாணவர்களின் அரசியல் கட்சியான தேசிய குடிமக்கள் கட்சி சார்பில் இந்த மாதத்தில் (ஜூலை) நாட்டின் பல்வேறு பகுதிகளில் பேரணிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, நேற்று முன்தினம் கோபால் கஞ்ச் நகரில் பேரணி நடத்தப்பட்டது.

ஷேக் ஹசீனாவின் மூதாதையர்கள் வாழ்ந்த நகரமான இது, அவாமி லீக் கட்சியின் கோட்டையாகக் கருதப்படுகிறது. இந்த நிலையில், நேற்று முன்தினம் [illegible]



பேரணி தொடங்கியது. அப்போது, அவாமி லீக் கட்சியினர், வன்முறையில் ஈடுபட்டனர். பல்வேறு வாகனங்களுக்குத் தீ வைத்த அவர்கள், பொலிஸார் மீது தாக்குதல்களை நடத்தினர். அப்போது, இரு தரப்புக்கும் இடையே நடந்த மோதலில் நால்வர் உயிரிழந்தனர். 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

வன்முறையை அடுத்து, மாணவர் தலைவர்கள் பொலிஸ் நிலையங்களுக்குள் தஞ்சம் புகுந்தனர். பலர், பொலிஸ் பாதுகாப்புடன் அண்டை மாவட்டங்களுக்கு விரைந்தனர்.

கோபால் கஞ்ச் மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதை அடுத்து தற்போது அங்கு கடைகள் அடைக்கப்பட்டு வீதிகள் வெறிச்சோடி காணப்படுகின்றன. பொது மக்கள் நடமாட்டம் இல்லாததால் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது.

இதனிடையே, வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது 24 மணி நேரத்துக்குள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மாணவர் தலைவர் நஷீத் இஸ்லாம் வலியுறுத்தியுள்ளார். மேலும், அண்டை மாவட்டமான பரித்பூரில் அடுத்த பேரணி நடத்தப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் ஒருநாள் போட்டியில்

# இங்கிலாந்தை வீழ்த்தி இந்திய அணி வெற்றி

லண்டன், ஜூலை 19


முதல் ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணியை வீழ்த்தி இந்திய மகளிர் அணி வெற்றி பெற்றது.

ஹர்மன்பிரீத் கவுர் தலைமையிலான இந்திய பெண்கள் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை இந்திய அணி 3-2 என்ற கணக்கில் வென்று வரலாறு படைத்தது.

அடுத்ததாக 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெறுகிறது. இதன்படி இந்தியா- இங்கிலாந்து இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி சவுத்தம்டனில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்களை இழந்து 258 ஓட்டங்கள் அடித்தது. அதிகபட்சமாக சோபியா டங்க்லி 83 ஓட்டங்களும், டேவிட்சன் ரிச்சர்ட்ஸ் 53 ஓட்டங்களும் எடுத்தனர். இந்தியா தரப்பில் கிராந்தி கவுட் மற்றும் சினே ராணா தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இதனையடுத்து 259 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி இங்கிலாந்து பந்துவீச்சை எளிதில் சமாளித்து வெற்றியை நோக்கி பயணித்தது. 48.2 ஓவர்களில் 6 விக்கெட்களை



இழந்த இந்திய அணி 262 ஓட்டங்கள் அடித்து 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தியா தரப்பில் தீப்தி சர்மா 62 ஓட்டங்களும், ஜெமிமா ரோட்ரிக்ஸ் 48 ஓட்டங்களும் அடித்து வெற்றிக்கு வித்திட்டனர்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. (எ)




## கார்ல்சனை வீழ்த்தினார் தமிழக வீரர் பிரக்ஞானந்தா

லாஸ் வேகாஸ், ஜூலை 19

லாஸ் வேகாஸ் செஸ் கிராண்ட்ஸ்லாம் போட்டியில் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் நோர்வே வீரர் மேக்னஸ் கார்ல்சனை இந்திய கிராண்ட்மாஸ்டர் ஆர். பிரக்ஞானந்தா வீழ்த்தினார்.

அமெரிக்காவின் லாஸ் வேகாஸில் லாஸ் வேகாஸ் செஸ் கிராண்ட்ஸ்லாம் போட்டி நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற 4ஆவது சுற்றில் தமிழக வீரர் பிரக்ஞானந்தாவுடன், உலக சம்பியன் பட்டத்தை 5 முறை வென்றவரான மேக்னஸ் கார்ல்சன் மோதினார். இந்த சுற்றில் 39ஆவது நகர்த்தலின் போது கார்ல்சனை வீழ்த்தினார் பிரக்ஞானந்தா.

இதன் மூலம் ரேபிட் செஸ் போட்டியின் புள்ளிப் பட்டியலில் பிரக்ஞானந்தா முதலிடம் பிடித்து அசத்தியுள்ளார். (எ)



மாகாண மட்ட கராத்தே போட்டியில் யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் 3 தங்கம், 3 வெண்கல பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர். வெற்றி பெற்ற மாணவர்கள், அதிபர், விளையாட்டு பொறுப்பாசிரியர், பயிற்றுவிப்பாளர்களுடன் நிற்பதை படத்தில் காணலாம்.

## “கடைசி இரு போட்டிகளிலும் விளையாட விரும்புகிறேன்”

லண்டன், ஜூலை 19

இந்தியாவுக்கு எதிரான கடைசி இரு போட்டிகளிலும் விளையாட விரும்புகிறேன் என்று இங்கிலாந்து நட்சத்திர வீரர் ஜோப்ரா ஆர்ச்சர் தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில், முதலாவது மற்றும் 3ஆவது டெஸ்டில் இங்கிலாந்தும், 2ஆவது டெஸ்டில் இந்தியாவும் வெற்றி பெற்றன. இதனால் இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இவ்விரு அணிகள் இடையிலான 4ஆவது டெஸ்ட் மான்செஸ்டரில் எதிர்வரும் 23ஆம் திகதி தொடங்குகிறது.

எஞ்சியுள்ள 2 போட்டிகளில் ஒன்றில் வெற்றி பெற்றாலே இங்கிலாந்து தொடரை கைப்பற்றி விடும் என்பதால் இந்த 2 போட்டிகளும் இந்தியாவுக்கு வாழ்வா -சாவா? போன்றதுதான்.

கடந்த போட்டியின் மூலம் ஏறக்குறைய 4 வருடங்களுக்கு பின் மீண்டும் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு திரும்பிய இங்கிலாந்து நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர் 5 விக்கெட்கள் (2 இன்னிங்ஸிலும் சேர்த்து) வீழ்த்தி அணியின் வெற்றியில் முக்கிய பங்காற்றினார். இதன் காரணமாக எஞ்சியுள்ள இந்த தொடரில் அவர் முழுமையாக விளையாடுவார் என்று அனைவராலும் எதிர்பார்க்கப்படுகிறது.

இருப்பினும் காயத்திலிருந்து குணமடைந்து வந்த உடனேயே அவரை அதிக பணிச்சுமைக்கு உட்படுத்த




கூடாது என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை கருதுவதாக தகவல் வெளியாகியது. இதனால் அவர் 2 போட்டிகளிலும் விளையாடுவாரா? அல்லது ஏதேனும் ஒன்றில் மட்டுமா? என்பது தெரியவில்லை.

இந்த நிலையில் இந்தியாவுக்கு எதிரான கடைசி 2 போட்டிகளிலும் விளையாட விரும்புவதாக ஜோப்ரா ஆர்ச்சர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், “நான் இந்திய அணிக்கு எதிரான கடைசி இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் விளையாட விரும்புகிறேன். கிரிக்கெட் சபை அனுமதித்தால் நான் விளையாடத் தயார். ஏனெனில் இந்தத் தொடரை இழக்க நாங்கள் விரும்பவில்லை. நான் ஏற்கனவே இந்தியா மற்றும் ஆஷஸ் தொடரில் விளையாட விரும்புவதாக தெரிவித்தேன். அதில் ஒன்று நிறைவேறிவிட்டது. அடுத்தது ஆஷஸ் தொடர். அந்தத் தொடருக்கு செல்ல என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன்”- என்றார். (எ)

ஐ. சி. சி. தரவரிசை

## உலக சாதனை படைத்தார் இந்திய வீரர் விராட் கோலி

மும்பை, ஜூலை 19



ஐ. சி. சி. தரவரிசையில் இந்திய வீரர் விராட் கோலி உலக சாதனை படைத்துள்ளார்.

இந்திய அணியின் முன்னணி வீரரான விராட் கோலி, இந்த தலைமுறையின் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக மதிக்கப்படுகிறார். அனைத்து வடிவிலான கிரிக்கெட்டிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளார். 36 வயதான அவர் சர்வதேச டெஸ்ட் மற்றும் ரி - 20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்று விட்டார். ஒருநாள் கிரிக்கெட்டில் மட்டும் விளையாட முடிவு செய்துள்ளார்.

இந்த நிலையில் சர்வதேச ரி - 20 போட்டிகளுக்கான துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசை பட்டியலை ஐ.சி.சி. புதுப்பித்துள்ளது. இதன்படி விராட் கோலி 909 புள்ளிகளுடன் தனது ரி - 20 கெரியரை முடித்துள்ளதாக ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

இதன் மூலம் மூன்று வடிவிலான (டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி - 20 கிரிக்கெட்) ஐ.சி.சி. தரவரிசை பட்டியலிலும் 900 புள்ளிகளை கடந்த ஒரே துடுப்பாட்ட வீரர் என்ற உலக சாதனையை விராட் கோலி படைத்துள்ளார்.

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் விராட் கோலியின் சிறந்த தரவரிசை புள்ளிகள் 937 ஆகும். ஒருநாள் கிரிக்கெட்டில் அவரது சிறந்த தரவரிசை புள்ளிகள் 909 ஆகும். இவை இரண்டையும் அவர் 2018ஆம் ஆண்டு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## சுவிஸ் ஓபின் ரென்னிஸ் அலெக்சாண்டர் வெற்றி

சுவிஸ், ஜூலை 19



சுவிஸ் ஓபின் ரென்னிஸ் தொடரில் கஜகஸ்தான் வீரர் அலெக்சாண்டர் பப்ளிக் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

சுவிட்சர்லாந்தில் ஏ.டி.பி. ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் கஜகஸ்தான் வீரர் அலெக்சாண்டர் பப்ளிக், சக நாட்டு வீரரான அலெக்சாண்டர் ஷெவ்சென்கோ உடன் நேற்று முன்தினம் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் சிறப்பாக விளையாடிய அலெக்சாண்டர் பப்ளிக் 6-2, 6-3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார். (எ)

## ரென்னிஸ் போட்டியிலிருந்து ஜெனி பௌச்சார்ட் ஓய்வு

ஒட்டாவா, ஜூலை 19

பிரபல ரென்னிஸ் வீராங்கனையான கனடாவை சேர்ந்த ஜெனி பௌச்சார்ட் (வயது- 31) ரென்னிஸ் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இந்த மாத இறுதியில் சொந்த மண்ணில் நடைபெறும் கனடா ஓபின் ரென்னிஸ் தொடருடன் அவர் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ஓய்வு குறித்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், “எப்போது என்று உங்களுக்குத் தெரியும். எனக்கு, இப்போதுதான். எல்லாம் தொடங்கிய இடத்திலிருந்து முடிகிறது“ என்று பதிவிட்டுள்ளார்.



இவர் ஆடிய நாட்க ளில் மகளிர் ரென்னிஸ் தரவரிசையில் சிறந்த நிலையாக 5ஆவது இடத்தை பிடித்துள்ளார். இவரது ஓய்வு முடிவுக்கு பலரும் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜிதவின்...

2.63 மில்லியன் ரூபாவுக்கும் அதிக நட்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு, கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனுவெல கடந்த 11 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தார்.

அதனையடுத்து தான் கைது செய்யப்படுவதை தடுக்குமாறு கோரி ராஜித சேனாரத்ன, கொழும்பு நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்த முன் பிணை மனு நேற்றைய விசாரணையின் போது நிராகரிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஆட்சியை...

தனது தந்தையை கைது செய்தாலும், செய்யாவிட்டாலும் இந்த ஆட்சியைக் கவிழ்ப்போம் என சதுர சேனாரத்ன குறிப்பிட்டிருந்தார். இது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் கூறியவை வருமாறு–

சட்டம் எவ்வாறு செயற்படும் என்பது எமக்கு தெரியாது. அதில் நாம் தலையிடுவதும் கிடையாது. எனினும், கைது பயத்திலேயே ராஜித பதுங்கி இருக்கக்கூடும். சிறைச்சாலையில் இருப்பதைவிடவும் ஒளிந்திருப்பது கஷ்டமாகவே இருக்கும். அந்த கஷ்டத்தையும் அனுபவித்துவிட்டு வரட்டும். சட்டம் தனது கடமையை செய்யும்–என்றார்.

## 21 இந்திய...

தங்கி இந்த மோசடி நடவடிக்கையில் ஈடு பட்டுள்ளனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையின் புலனாய்வுப் பிரிவின் கீழ் உள்ள, இடர் மதிப்பீட்டு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட தரவு பகுப்பாய்வின் பின்னர் இந்த குழுவினர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் 22 முதல் 36 வயதுக்குட்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த குழுவினரை உடனடியாக இந்தியாவுக்கு நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குடிவரவு மற்றும் குடியகல்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர். (அ)

## ஊழலில்

மாவட்டத்துக்கு முதல் தடவையாக விஜயம் செய்த சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று நண்பகல் மாவட்ட பிராந்திய சுகாதார சேவை அலுவலகத்துக்கு விஜயம் செய்தார்.

இதன்போது கிழக்கு மாகாண சுகாதாரத் துறையினரால் அமைச்சர் கௌரவிக்கப்பட்டார்

இதனையடுத்து மாவட்டத்திலுள்ள பிரதேச வைத்தியசாலைகளின் தற்போதைய நிலைமைகள் குறித்து சுகாதாரத் துறை அதிகாரிகளுடன் அமைச்சர் கலந்துரையாடலில் ஈடுபட்டார் .

இந்நிகழ்வில் பிரதேச வைத்திய சாலைகளின் வைத்திய அதிகாரிகள் கலந்துகொண்டு தங்களது முக்கிய தேவைகள் பற்றி அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இதன்போது எதிர்வரும் காலத்தில் கட்டம் கட்டமாக அவற்றை நிறைவேற்றி தருவதாக அமைச்சர் உறுதி அளித்தார். அத்துடன் கிழக்கு மாகாண பிராந்திய வைத்தியசாலைகளின் முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்ய எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கப்படும் என்வும் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் இந்த விஜயத்தின் போது மாகாண சுகாதாரத் துறையின் உயர் அதிகாரிகள், பிரதேச வைத்திய சாலைகளின் வைத்திய அத்தியட்சகர்கள், சுகாதார அமைச்சின் செயலாளர், வைத்தியர்கள், பிராந்திய சுகாதாரப் பணிமனையின் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்தி குழுக்கூட்டம்: சுகாதாரம், கல்வி உள்ளிட்ட பல விடயங்கள் ஆராய்வு

முல்லைத்தீவு, ஜூலை 19

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று, பாராளுமன்ற உறுப்பினரும் புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான செ.திலகநாதன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இ.விஜயகுமாரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தில், வன்னி மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், மயில்வாகனம் ஜெகதீஸ்வரன் உட்பட புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஏனைய திணைக்கள தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் சுகாதாரம், கல்வி, நீர்ப்பாசனம், விவசாயம், காணி, வீதி அபிவிருத்தி, சட்டவிரோத செயற்பாடுகள், தொடர்பான பிரச்சினைகள் முதன்மையாக கலந்துரையாடப்பட்டு சில தீர்மானங்கள் எட்டப்பட்டதுடன் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன. (அ)

## மருந்தாளர்கள்...

உரிமையாளர்கள் சங்க உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மருந்தகத்தில் இருந்து பரிந்துரைக்கப்பட்ட அளவுகளில் மருந்துகளை வழங்கும் செயல்பாடானது தொழில்முறை சார் செயல்முறையொன்றாகும். இது முக்கியத்துவம் வாய்ந்ததொரு செயல்முறையாகும். அரச வைத்திய சாலைகளில் கூட மருந்தாளர்களுக்கு பற்றாக்குறை காணப்படுகிறது. ஆகையால் கொள்கையளவில் நாம் சரியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். மருந்தாளரின் செயல்முறை தொழில்முறை நிபுணத்துவம் வாய்ந்ததொரு செயல்முறை என்பதால், அந்தத் தகுதி உள்ள ஒருவரால் அது மேற்கொள்ளப்பட வேண்டும்.

சமார் 5 ஆயிரம் மருந்தகங்கள் காணப்பட்டாலும், அவற்றில் பெரும்பாலானவற்றில் மருந்தாளர்கள் இல்லை. எனவே இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண காலக்கெடுவுடன் கூடியதொரு திட்டமொன்று தேவையாகும் . மருந்தகங்களை மூடுவதோ அல்லது மருந்து வழங்கும் செயன்முறையை தாம் விரும்பிய வகையில் முன்னெடுப்பதோ இந்தப் பிரச்னைக்கான பதிலாக அமையாது.

இச்சமயம் இந்தப் பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டு வீதியில் போராட்டங்களுக்கு இறங்கினால், அது அரசியல் கட்சிகளுக்கே பயனளிக்கும் விடயமாக காணப்பட்டாலும், அது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விடயமாக அமைந்து விடும். எனவே இந்தப் பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டு வீதியில் இறங்க வேண்டாம்.

பொதுமக்கள் குறித்து சிந்தித்து அதற்கேற்ப செயல்படுங்கள். இச்சமயம் இந்தப் பிரச்னைக்குத் தீர்வாக, மருந்தகங்கள் முறையாகச் செயல்படுவதோடு, தகுதிவாய்ந்த மருந்தாளர்களால் முறையாகப் பணியாளர்கள் நியமிக்கப்படும் வரை, குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் ஒரு திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

இது தொடர்பான வேலைத்திட்டமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்றேன். இந்தப் பற்றாக்குறை தீரும் வரை நடுநிலையிலிருந்து செயல்படுங்கள். உயர்தரத்தில் சித்தியடைந்தவர்களை ஒப்பந்த முறையின் மூலம் இடைநிலைப் பயிற்சியை வழங்கி மேற்பார்வையின் கீழ் பணியமர்த்த நடவடிக்கை எடுங்கள். மருந்துகளை ஒழுங்கற்ற முறையில் வழங்குவது தவறாகும். இது போன்ற இடைநிலை தீர்வுக்கு செல்லுங்கள். இது தொடர்பாக பாராளுமன்றத்தில் நான் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பேன் என்றார். (அ)

# கல்வித்துறையில் தன்னிச்சையாக மறுசீரமைப்புக்கள் செய்யக்கூடாது

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 19

அரசாங்கம் கல்வித்துறையில் தன்னிச்சையாக மறுசீரமைப்புக்களை செய்யக் கூடாது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் கல்வித்துறையில் மறுசீரமைப்புக்களை மேற்கொண்டு வருகின்ற போதிலும் எந்த தரப்புடனும் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டில் கல்வித்துறையில் மறுசீரமைப்புக்கள் செய்யப்படுமாயின் அது அனைத்து தரப்பினரதும் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தையின்றி தன்னிச்சையாக மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புக்களின் ஊடாக பல்வேறு பிரச்னைகள் உருவாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

தரம் ஒன்றுக்கு பிள்ளைகளை சேர்த்தல் போட்டி, தனியார் வகுப்பு போட்டி, பரீட்சை போட்டி, பல்கலைக்கழக அனுமதி போட்டி மற்றும் ஆங்கில மொழி திறன் போட்டி என நாட்டில் ஐந்து வகையான போட்டிகள் காணப்படுவதாக அவர் கூறினார்.

இந்த போட்டிகள் இல்லாதொழிக்கப்பட வேண்டுமென ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

கல்வித்துறையில் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது எனவும் அது காத்திரமானதாக அமைய வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# இசை வேள்வி

யாழ்ப்பாணம், ஜூலை 19

இணுவில் அறிவாலயம் நடத்தும் ஆடி மாத இசைவேள்வி நிகழ்வில் அழகேசன் மைந்தர்களின் இசை நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு அறிவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இணுவில் அறிவாலயத் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பஷன் ஹவுஸ் உரிமையாளர் த.கந்தசாமியும் சிறப்பு விருந்தினராக டெல்லி பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவன் ஐ.வி.மகாசேனனும் கலந்துகொள்வர்.

## இசைத்துறையில்...

சந்திப்பில் கலந்து கொண்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்துக்கு வந்தது பெரும் சந்தோசம். உலகில் எந்த நாட்டுக்கு போனாலும் அங்கே ஈழ தமிழர்கள் எனக்கு தரும் அன்பும் ஆதரவும் அதிகம்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த நேரம் முதல் இங்குள்ளவர்கள் அன்பை மட்டுமே வெளிப்படுத்திக்கொண்டு இருக்கின்றார்கள்.

நடைபெறவுள்ள இசை நிகழ்வு மருத்துவ பீட மாணவர்கள் தமது கற்றல் செயல்பாட்டுக்குச் சென்று வருவதற்கு பஸ் வாங்க நிதி திரட்டவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இசை நிகழ்வு மிக பிரமாண்டமான முறையில் நடைபெறும். நிகழ்வில் உங்களுக்கு பிடித்த பாடல்களை பாடி மகிழ்விப்போம்.

என்னுடன் பாடல்களை பாடி உங்களை மகிழ்விக்க எனது மகள் சரண்ஜா, அக்சயா, ஜீவன் மற்றும் உங்கள் பாடகி கில்மிசா ஆகியோரும் காத்திருக்கிறோம்.

மருத்துவ பீட மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்காக நிதி திரட்டும் இசை நிகழ்வு என்பதனால் நான் ஊதியம் பெறவில்லை. கற்றல் செயற்பாட்டுக்கு என்னால் முடிந்தது. அதே போன்று இசை நிகழ்வுக்கு உங்கள் ஆதரவுகளை வழங்கவேண்டும்.

தற்காலத்தில் திரையுலகில் பாடகர்களுக்கான வாய்ப்புக்கள் குறைந்துள்ளன. முன்னைய கால படங்களில் ஒவ்வொரு படங்களிலும் ஐந்தாறு பாடல்கள் இருக்கும். தற்கால படங்களில் அவ்வாறு இல்லை.

ஆனாலும் தற்போது இசை மேடைகள் தாராளமாக பாடகர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கி வருகின்றன. அதனால் பாடகர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. அதனூடாக பாடகர்கள் சம்பாதிக்கின்றார்கள் என்பதனை தாண்டி இசை மேடைகளில் நேரடியாக பாடி இரசிகர்களை மகிழ்விப்பது ஒரு மன திருப்தியை பாடகர்களுக்கு தருகிறது.

யாழ்ப்பாணத்தில் திறமையான கலைஞர்கள் நிறையவே இருக்கின்றார்கள். தற்போது தென்னிந்திய தொலைக்காட்சிகள் ஊடாக அவர்களின் திறமைகள் வெளிப்படுகின்றன.

இருந்தாலும் தென்னிந்தியாவில் உள்ள வாய்ப்புகள் வசதிகள் போன்று இங்கு இல்லை. அதனால் இசைத்துறை சார்ந்து கற்பவர்களுக்கு வகுப்புகள் பயற்சிகள் தொடர்பில் இங்குள்ளவர்கள் ஏற்பாடுகளை செய்தால் நிச்சயமாக எனது ஆதரவை வழங்குவேன் - என்றார். (அ)

## வவுனியா...

நடத்தியதாகவும், அதில் 5 பொலிஸார் காயமடைந்ததுடன், பொலிஸாரின் இரு மோட்டர் சைக்கிள்கள் மற்றும் கப் ரக வாகனம் ஒன்றும் சேதமாக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் அரச சொத்துக்களைச் சேதப்படுத்தியமை, மக்களை ஒன்று கூட்டியமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறை ஏற்படுத்தியமை, இறப்புக்கு காரணமாக இருந்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் இருவர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர்.

அதனை தொடர்ந்து பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளையடுத்து மேலும் 5 பேர் நேற்று கைது செய்யப்பட்டனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கெஹலியவுக்கு எதிரான வழக்கு ஒக்ரோபர் 28இல் விசாரணை

கொழும்பு, ஜூலை 19

**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 10 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான பணத்தை அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்தி ஊழலில் ஈடுபட்டமை தொடர்பில் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் 28 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.**



2014ஆம் ஆண்டில் வெகுஜன ஊடகத்துறை அமைச்சராக கெஹலிய ரம்புக்வெல கடமையாற்றிய காலத்தில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 10 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான பணத்தை அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்தி ஊழலில் ஈடுபட்டார் என்று மூவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன முன்னிலையில் அழைக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஐ)

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டில் ரூ. 47 கோடி வெல்லப்பட்டது

கொழும்பு, ஜூலை 19

நாட்டின் வரலாற்றில் மிகப்பெரிய அதிர்ஷ்ட இலாப சீட்டு பரிசான 47 கோடி ரூபாயை வென்றவருக்கான காசோலையை தேசிய லொத்தர் சபை வழங்கியுள்ளது.

மெகா பவர் 2210ஆவது சீட்டிழுப்பில், 47 கோடியே 45 இலட்சத்து 99 ஆயிரத்து 422 ரூபாயை கொக்கரெல்ல பகுதியைச் சேர்ந்த விற்பனை முகவரான எச். ஏ. ஜானகி ஹேமமாலா விற்பனை செய்துள்ளார்.

தேசிய லொத்தர் சபை ஏற்பாடு செய்த விடேச நிகழ்வு ஒன்றில் கொழும்பு மாநகர முதல்வர் வ்ராய் கெலி பல்தசாரினால் வெற்றி பெற்றவருக்கான காசோலையை வழங்கினார்.

துணை மேயர் ஹேமந்த வீரகோன், தேசிய லொத்தர் சபை தலைவர் எம். டி. சி. ஏ. பெரேரா மற்றும் பொது முகாமையாளர் ஏ.எம். ஆரிப் ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர். (ஐ)

## தயாசிறி சி.ஐ. டியில் முன்னிலை



கொழும்பு, ஜூலை 19

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் (சி. ஐ. டி) நேற்று வெள்ளிக்கிழமை காலை முன்னிலையானார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் முறைப்பாடு அளிப்பதற்காகவே அவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையானார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு தற்காலிக சாரதி அனுமதி பத்திரம்

கொழும்பு, ஜூலை 19

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வெளிநாட்டு பயணிகள் வருகை தந்தவுடன் தற்காலிக சாரதி உரிமங்களை வழங்க போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தில் பிரத்யேக இடமொன்றை அமைக்க அமைச்சகம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் 03 ஆம் திகதி முதல் அமலுக்கு வரும் வகையில் புதிய நடைமுறையை உத்தியோகப்பூர்வமாக தொடங்க அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

தற்போதுள்ள விதிமுறைகளின்படி, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வெரஹெராவில் உள்ள மோட்டார் போக்குவரத்துத் துறை பணிமனையில் தற்காலிக சாரதி உரிமத்தைப் பெற வேண்டும்.

புதிய நடவடிக்கை, செயன்முறையை நெறிப்படுத்துவதையும் சுற்றுலா பயணிகளின் வசதியை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று போக்குவரத்து அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

## இணையம் மூலம் ஊடுருவி 5 இலட்சம் ரூபாய் திருட்டு!

### வவுனியா மாணவன் கைது

கொழும்பு, ஜூலை 19

இணையவழியில் ஒருவரின் வங்கி கணக்குக்குள் ஊடுருவி 5 இலட்சம் ரூபாய் பணத்தை களவாடினார் என்ற குற்றச்சாட்டில் பல்கலைக்கழக மாணவன் ஒருவரை குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ருஹுனு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனே நேற்று முன்தினம் இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைதானவர் வவுனியா - புதுக்குளத்தை சேர்ந்தவராவார். சி. ஐ. டி. அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## நீரில் மூழ்கி சிறுவன் பலி

கொழும்பு, ஜூலை 19

நீர்த் தேக்கத்தில் நீராடிய சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

அம்பாந்தோட்டை - லுனுகம்வெஹர நீர்த் தேக்கத்தில் நீராடியவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் திஸ்ஸமஹராமை பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுவனாவார். இவர், நண்பர்கள் நால்வருடன் இணைந்து நீராடியபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லுனுகம்வெஹெர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 59 தொழிற்சங்கங்களின் பதிவு இரத்து

கொழும்பு, ஜூலை 19

நாட்டில் செயல்படும் 59 தொழிற்சங்கங்களின் பதிவுகள் அண்மைக்காலத்தில் இரத்து செய்யப்பட்டுள்ளன என்று தொழிலாளர் திணைக்களம் அறிவித்துள்ளது.

தொழில் திணைக்களத்தின் சட்ட திட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் இவற்றின் பதிவு ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் தற்போது, 2,122 தொழிற்சங்கங்கள் செயல்படுகின்றன. இவற்றில் 128 தொழிற்சங்கங்கள் கடந்த 2023ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. உத்தியோகபூர்வ தொழிற்சங்க அந்தஸ்தைப் பெற்றுக் கொள்ள தொழிற்சங்கள் தொழில் திணைக்களத்தில் பதிவு செய்து கொள்வது அவசியமாகும்.

எனினும் தொழில் திணைக்களத்தின் வழிகாட்டல்கள், விதிமுறைகளை மீறிச் செயல்படும் தொழிற்சங்கங்களின் பதிவுகளை இரத்துச் செய்யும் அதிகாரம் தொழில் திணைக்களத்துக்கு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நேற்றைய துப்பாக்கிச்சூட்டில் தெகிவளையில் ஒருவர் காயம்

கொழும்பு, ஜூலை 19

கொழும்பு - தெகிவளையில் நேற்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்தார்.

தெகிவளை புகையிரத நிலையம் அருகே இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச்சூட்டை நடத்தி விட்டு துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் களுபோவில போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## விபத்தில் இளைஞர் பலி!

### கொழும்பு, ஜூலை 19

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

கேகாலை - அரநாயக்க பொலிஸ் பிரிவை சேர்ந்த இளைஞர் ஒருவரே உயிரிழந்தார். நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 23 வயது நபராவார்.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை அரநாயக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி

கொழும்பு, ஜூலை 19

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்றைய தினம் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்றுவீத அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 297 ரூபாய் 68 சதமதாக பதிவாகியுள்ளது. அத்துடன் விற்பனை விலை 305 ரூபாய் 22 சதமாக பதிவாகியுள்ளது. இது நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியாகும்.

## 100,000ஐ அண்மிக்கிறது சுற்றுலாவிகள் தொகை

கொழும்பு, ஜூலை 19

இந்த மாதத்தின் முதல் 16 நாட்களிலும் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை சுமார் ஒரு இலட்சத்தை எட்டியுள்ளது என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

2024ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக அந்த அதிகார சபை குறிப்பிடுகிறது.

இதன்படி, இந்த மாதத்தின் முதல் 16 நாட்களிலும் 98 ஆயிரத்து 765 பேர் வருகை தந்துள்ளனர். இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 12 இலட்சத்து 60 ஆயிரத்தை கடந்துள்ளது. (ஐ)

## கணவனை கொன்றுவிட்டு நாடகமாடிய மனைவி கைது

கொழும்பு, ஜூலை 19

கணவனை பொல்லால் தாக்கி கொன்று வீட்டின் பின்புறத்தில் குழி தோண்டி புதைத்தார் என்று கூறப்படும் மனைவியை பொலிஸார் கைது செய்துள்ளனர். அதேநரத்தில் அந்தப் பெண்ணுடன் தகாத உறவில் இருந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை - வலஸ்முல்லை பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று அறிய வருகிறது.

கடந்த புதன்கிழமை, சந்தேகநபரின் வீட்டின் பின்புறமாக நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த ஒரு மனிதக் கால் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்த விசாரணையில், காலுக்கு உரிய நபரின் சடலம் வேறோர் இடத்தில் மீட்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவர் 51 வயதுடையவர்.

அவரை இரண்டு மாதங்களாக காணவில்லை என அவரின் மனைவியே கடந்த ஜூலை 8ஆம் திகதி வலஸ்முல்லை பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்நிலையில், சந்தேகத்தின் அடிப்படையில் அவரின் மனைவியை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது, தனக்கும் கணவருக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டதுடன், கடந்த மே 11ஆம் திகதி ஏற்பட்ட சண்டையின்போது கணவனை பொல்லால் தாக்கியதால் அவர் உயிரிழந்தார் என்றும் பின்னர் சடலத்தை வீட்டின் பின்புறத்தில் குழி தோண்டி புதைத்தேன் என்று அவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

மேலும், இறந்தவரின் மனைவிக்கு வேறு ஒருவருடன் தொடர்பு இருந்ததாகவும் இதன் காரணமாகவே தம்பதிக்குள் முரண்பாடு ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றன.

இந்நிலையில், சந்தேகநபரான பெண்ணுடன் தொடர்பில் இருந்த அந்த நபரும் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org